வாலிபர் நடுவில் எழுப்புதல்; வாலிபர் மூலம் நற்செய்திப்பணி!

www.bymonline.org

# Blessing

பிரதி ரூ.10/-
ஆண்டுச் சந்தா ரூ.100/-

TAMIL ஏப்ரல் 2020
மலர் 49 இதழ் 4 எண் 529

போ அத்துடன் அனுப்பு



## போதகர்களிடமிருந்து...

அன்பான மீந்திருக்கிறவர்களே!

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்.

இந்த மாதத்தில் உங்களோடு ஒரு சத்தியத்தை நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இயேசு நடந்தபடியே நாமும் நடக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் (1 யோ 2:6). “செயல்கள் வார்த்தைகளைவிட அதிகமாகப் பேசும்” என்ற பழமொழியை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். அவரது அடிச்சுவட்டில் நாம் நடக்கும்படியாக இயேசு நமக்கு ஒரு முன்மாதிரியை விட்டுச் சென்றிருக்கிறார். இயேசு செயல்படுகிறவராகவும், போதிக்கிறவருமாகவும் இருந்தார் என்பதாக நாம் காண்கிறோம் (அப் 1:1).

இதன் காரணமாக, அவருடைய போதனைகள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவைகளாக விளங்கியது. மக்கள் அவருடைய போதனைகளைக் குறித்து ஆச்சரியமடைந்தார்கள். பெருங்கூட்ட மக்கள் அவரைப் பின்பற்றினார்கள். இக்காலத்தில் நமக்கு அநேக போதகர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் போதிக்க மட்டும் செய்வார்களே தவிர அதைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். இதன் விளைவாக அவர்கள் கனிகொடுக்க மாட்டார்கள். மற்றவர்கள் கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்ளுவதற்கு அவர்கள் இடையூறாகவும், தடைக் கற்களாகவும் மாறி விடுகிறார்கள். இப்படிப் பட்டவர்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல்,“மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியா மலிருக்கலாமா? என்று கூறுகிறார். “தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய் தூஷிக்கப்படுகிறதே” (ரோம 2:21-24) என்று எச்சரித்துள்ளார்.

ஒன்றைக் கடைப்பிடிக்காமல் அதைப் போதிப்பது கபட நாடகம். பரிசேயர்கள் இந்தக் காரியத்தில் மிகவும் கைதேர்ந்தவர்கள். சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொட மாட்டார்கள்” (மத் 23:4). வெளித்தோற்றத்தில் பரிசேயர்களின் வாழ்க்கை மிகவும் நன்றாக இருந்தது. ஆனால் உட்புறத்தில் அவைகள் குறைகளோடிருந்தது. அவர்களை இயேசு குருடரான வழிகாட்டிகள், மாயக்காரர்கள் என்று அழைத்தார். “ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லோரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்” (மத் 5:19).

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் வித்தியாசமான சூழ்நிலைகளை நாம் எவ்வாறு எதிர்கொள்ளுகிறோம் என்பதை மக்கள் விழிப்புடனும், உன்னிப்பாகவும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் தங்கள் பெற்றோரைக் கவனித்து அவர்களைப்போல நடந்துகொள்ளுகிறார்கள். பெற்றோர்கள் தங்கள் வார்த்தைகளுக்கேற்ப நடந்துகொள்ளாதபோது அவர்கள் ஏமாற்றமடைவதுடன், வழிதவறிச் சென்றுவிடவும் கூடும். இது தலைவர்களுக்கும், மூப்பர்களைப் போன்றவர்களுக்கும் பொருந்தும். பவுல், எபேசுவிலுள்ள மூப்பர்களுக்கு அறிவுரை கூறும்பொழுது, தான் எவ்வாறு அவர்களிடையே வாழ்ந்தார் என்பதை விவரித்துக் கூறியுள்ளார். ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் அவர் இச்சிக்கவில்லை என்று தெரிவித்ததுடன், எந்தெந்த வழிகளில் கடினமாய் பிரயாசப்பட வேண்டும் என்பதை அவர்களுக்குக் காட்டியதையும், ஆண்டவராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைவுகூர வேண்டும் என்று தெரிவித்ததையும் விவரித்துள்ளார் (அப் 20:17-35).

நாம் வெறுமனே திருவசனத்தைக் கேட்டுவிட்டு அதன்படி செய்யாவிட்டால், நம்மைநாமே வஞ்சிக்கிறவர் களாயிருப்போம் (யாக் 1:22). நாம் போதிப்பதைக் கடைப்பிடிக்கும் விதமாக நாம் பிறருக்கு ஆலோசனையாக, அறிவுரையாகச் சொல்லுவதை நமது வாழ்க்கையில் உபயோகித்துப் பார்க்க வேண்டும். எப்பொழுதுதெல்லாம் ஒரு பின்னடைவு ஏற்படுகிறதோ அப்போது நாம் தேவனுடைய பெலத்தைப் பெற்று முன்னேறிச் செல்ல வேண்டும். கர்த்தருடைய கிருபை அவருக்குப் பயந்தவர்கள் மேலும், அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலும் உள்ளது (சங் 103:17-18). நம்மைப் பெலப்படுத்தும் தேவனுடைய கிருபை எப்போதும் உள்ளது. நாம் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்வோம் (1 கொரி 10:31).

அவருடைய சேவையில் உங்கள்,

**A. லயனல்**

# வெடிப்புள்ள தொட்டிகள்

அர்னால்டு குக்

ஒரு சபை தலைவராக, எழுப்புதலைக் குறித்த கவலை எனக்குண்டு. எனது பின்னணி என்னவென்றால், 11 ஆம் வயதில் கிராமத்திலுள்ள ஒரு சபையில் இரட்சிக்கப்பட்டேன். பின்பு, என்னுடைய 20 ஆம் வயதில் ஒரு ஆவிக்குரிய கருத்தரங்கில் போதகர் ஒருவர், நான் கேள்விபட்டிராத வேத சத்தியங்களை போதித்தார். பின்பு, எழுப்புதல் நிறைந்த ஒரு சபைக்கு தேவன் என்னை நடத்தினார். இந்த சபையில் நான் இருந்த நாட்களில் பல விஷயங்கள் மறக்க முடியாத அனுபவமாக மாறியது.

இங்கு அசாதாரண நிகழ்வுகளை காண முடிந்தது. இவர்கள் நற்செய்தி பணிக்கு எவ்வாறு முன்னுரிமை கொடுத்தனர் என்பது ஒரு ஆதாரம். இரண்டு வார சுவிசேஷ கூட்டங்கள் நான்கு வாரம் வரை நீடித்துக் கொண்டிருந்தது. ஜனங்களின் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஒருமனமாய் சபையில் கூடி ஜெபிப்பதின் முக்கியத்துவத்தை தேவன் எனக்கு கற்பித்துக் கொண்டிருந்தார். தேவனை முழுமையான அர்ப்பணத்தோடு தேடுவதன் இரகசியத்தையும் புரிந்து கொண்டேன். தேவன் ஜனங்களை மறுரூபப்படுத்திக் கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவரை பற்றி நான் கேள்விபட்டதே இல்லை. அங்கு, நான் அவரை அறிந்துகொண்டு, பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதலுக்கு என்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்தேன்.

நான் இப்போது முதிர் வயதுள்ளவனாகி விட்டேன். தேவன் எனக்கு கொடுத்த மகிமையான எழுப்புதல் அனுபவங்களுக்காக நன்றி செலுத்துகிறேன். ஆனாலும் என்னுடைய கேள்வி இதுவே: “என்னுடைய தலைமுறை பின்வரும் தலைமுறைக்கு கொடுக்கக் கூடிய அசாதாரண அனுபவங்கள் எவைகள்?” இதுவே, என்னுடைய இருதய பாரம். பரம அனுபவங்களை பின்வரும் தலைமுறையினருக்கு எப்படி கடத்துவது என்பதுதான்.

## தேவனுடைய சந்திப்பின் மிகப்பெரிய அவசியம்

இன்று சபைகளில் நடக்கும் காரியங்கள் என்னை மிகவும் பாரப்படுத்துகின்றன. சபைகளிலே எழுப்புதலைக் குறித்த செய்திகள் குறைந்து கொண்டிருக்கின்றன; பிரிவினைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. சபை கருத்தரங்குகள் பல அதிகரித்துள்ளன; கூடி ஜெபிக்கும் ஜெபங்கள் குறைந்து வருகின்றன. சமூக சேவையில் ஆர்வம் அதிகரித்துள்ளது, வேத சத்தியம் ஒதுக்கப்படுகிறது. ஆவிக்குரிய மறுமலர்ச்சியைப் பார்க்கிலும் சபைக் கட்டமைப்பு சீர்திருத்தங்களுக்கு (Organisational Reforms) முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. இடம் பெயர்வதால் வரும் சபை வளர்ச்சியை மட்டுமே நாம் காண முடிகிறது; மனம் மாறுவதால் நிகழும் மறுமலர்ச்சியை நாம் காண முடிவதில்லை. ஆனால், உற்சாகமூட்டும் உண்மை என்னவெனில், சிலர் மட்டும் தீர்க்கதரிசிகளைபோல இவைகளுக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றனர்.

தேவனுடைய சந்திப்பு நமக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. சபைகளும், சங்கங்களும் திடமாகவும், தெளிவான தரிசனத்துடனும் துவங்கப்படுகின்றன. ஆனால் காலப்போக்கில், நலிவடையத் துவங்குகின்றன. இது தடுக்கப்படவில்லையென்றால், தேவன் தமது கரத்தை எடுத்து, அடுத்த நபரை பயன்படுத்த துவங்குவார். இப்படிப்பட்ட நலிந்துபோன சபைகளின், சங்கங்களின் மேலும் “இக்கபோத் – மகிமை கடந்து போனது” என்று தேவன் எழுதி விடுவார். இது இப்பொழுது நடந்து கொண்டிருப்பதை காண முடிகிறது. இதிலிருந்து என்னுடைய கணிப்பு என்னவென்றால்,

1. இது நடப்பது இயல்பானதே.

2. தெளிவான தரிசனத்துடனும், கடினமான தீர்மானங்களுடனும் இதை தவிர்க்க முடியும்.

3. தேவன் அனுப்பும் எழுப்புதலினாலும், மறுமலர்ச்சியினாலும் மறுபடியும் சபைகள் உயிர் பெற்றுவிடும்.

சபை சரித்திரத்தில் இதை நாம் நெடுகவே காண முடிகிறது. தேவன் சபைகளின்மேல் மறுமலர்ச்சியை அனுப்பும்போது, ஆவியானவரின் செயல்பாடுகள் பல வெளிப்பட துவங்கும். தேவன் தமது சபையை மறுபடியும்

எழுப்பி, முன்னேற்றி நடத்துவார். இதுவே, இன்றைய தேவை என்று நான் விசுவாசிக்கிறேன்.

எரேமியா 2:9-13 வசன பகுதிகளை சற்று தியானிப் போம். எரேமியாவின் ஊழியம் 5 ராஜாக்களின் காலங் களில் காணப்பட்டது. யோசியா ராஜாவின் காலத்திலே எரேமியா தீர்க்கதரிசனம் உரைக்கத் துவங்கினார். அக்காலகட்டத்திலே ஒரு எழுப்புதல் ஏற்பட்டது. ஆனால் யோசியா ராஜா மரணமடைந்தவுடன் எழுப்புதலும் நின்று போயிற்று.

எரேமியா 2:11-13 வசனங்களில், தன் ஜனங் களுக்காக அவனுடைய கரிசனையை காண முடியும்: "எந்த ஜாதியாவது தேவர்களல்லாத தங்கள் தேவர் களை மாற்றினது உண்டோ என்றும் பாருங்கள்; என் ஜனங்களோ வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்கள். வானங்களே, இதினிமித் தம் பிரமித்துக் கொந்தளித்து, மிகவும் திடுக்கிடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டு விட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டி களாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்."

தொட்டிகள் அவசியம்தான்; நியாயமானவை கள்தான். அதற்கென்று சில பயன்பாடுகள் உண்டு. தண்ணீர் இல்லாத காலத்தில் பயன்படும்படியாக, மழைக்கால நீரை சேமித்து வைப்பதே இதன் நோக்க மாகும். ஆனால் இங்கு சில சிக்கல்கள் உண்டு. இத் தண்ணீர் பல நாட்கள் தேங்குவதால், அசுத்தமாக மாறி, தொட்டிகள் உடைந்து, ஒழுகும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவனை முற்றிலும் மறந்தனர். எரேமியா 2:5இல் "என்னைவிட்டுத் தூரப்பட்டு" போனார்கள் என்று தேவன் கூறுவதை பார்க்கிறோம். 7ஆம் வசனத்தில், "என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி, என் சுதந்தரத்தை அருவருப்பாக்கினீர் கள்" என்று ஆண்டவர் கூறுகிறார். ஆசாரியர் மவுனம் சாதித்தனர். அதிகாரிகள் பாவம் செய்தனர். தீர்க்க தரிசிகள் அந்நிய தேவர்களின் பெயரில் தீர்க்கதரி சனம் உரைத்தனர். இஸ்ரவேல் ஜனத்தாரின் வரலாற் றில் இது இருண்ட பகுதியாக காணப்பட்டது. தேவனுக்கு பதிலாக, உடைந்த தொட்டிகளை தெரிந்தெடுத்தி ருந்தனர்.

**சபையிலே காணப்படும் சத்தியத்திற்கு எதிரான மாற்றுகள்**

இன்று சீர்திருத்த சபைகளிலே காணப்படும் சத்தி யத்திற்கு எதிரான மாற்றுகள் (Substitutes) பல உள்ளன. இப்படிப்பட்ட காரியங்களை நாம் சகித்துக்கொள்வ தால், அப்போஸ்தலன் பவுல் கூறுவதைப்போல, நாம் "தங்களைக் கொண்டு தங்களை அளந்துகொள்ளும்" புத்தியீன கூட்டத்தை சேர்ந்தவர்கள் ஆகி விடுகிறோம் (2 கொரி 10:12). வெற்றி பெறுவதற்கான தவறான வழிமுறைகளை நாம் கையாளுகிறோம். நாம் மற்ற வர்களை பார்க்கிலும் வளர்வதாக நினைத்துக்கொண்டு, உயிர் உள்ளவர்கள் என்று எண்ணுகிறோம்.

மாற்றுகள் (Substitutes) என்ற வார்த்தை மிகவும் மிருதுவானதாக கருதுகிறேன். "விக்கிரகம்" என்ற வார்த்தை சரியாக இருக்கும். 2 நாளா 7:14இன் படி "அக்கிரமம்" என்ற வார்த்தையே மிகவும் பொருத்த மானது.

**1. முடிவில்லா தொழில்நுட்பமா? அசாதாரண தேவனுடைய இடைபடுதலா? (Endless Technology Vs Spiritual Intervention of God)**

தொழில்நுட்பம் ஒரு குறிப்பிட்ட தலைமுறையி னரை வெகுவாக பாதிக்கும். தற்போதுள்ள தலை முறையினர் அனுபவித்ததைப்போல் தொழில்நுட்ப மாற்றங்களை எந்த தலைமுறையினரும் கண்ட தில்லை. இந்த மாற்றங்கள் நம்மையும், நமது சபை களையும், நமது சமுதாயத்தையும் மாற்றி விட்டன.

இன்று தேவனுடைய அசாதாரண இடைபடுதலை வாஞ்சிப்பதைப் பார்க்கிலும், நாம் தொழில்நுட்ப முன்னேற்றங்களைத்தான் தேடுகிறோம். இன்னு மொரு நிகழ்ச்சி, இன்னுமொரு தொழில்நுட்பம், இன்னு மொரு விந்தை என நமது கவனங்கள் சிதறி போய் விட்டன. இப்படி நம் கவனங்கள் சிதறுவதால், தேவன் நமது சபைகளிலே இடைபடுவதில்லை.

**2. பாவ உணர்வில்லாத சுவிசேஷ பணியா? தீவிர மான மனந்திரும்புதலா? (Guiltless Evangelism Vs Radical Repentence)**

சபை வளர வேண்டும் என்ற எண்ணத்தினால்தான், சபையானது கேட்போரை பிரியப்படுத்துவதிலும் (User

Friendly), தேடுவோரை கவனமாக காயப்படாமல் இயேசுவினிடம் நடத்த முயற்சி எடுக்கிறது. ஜனங்கள் பாவத்தை அறியாமல் இயேசுவை அறிந்து கொள்கின்றனர். நாம் கிறிஸ்துவிடம் எப்படி வருகி றோமோ, அப்படியேதான் வளருவோம். மனந்திரும்புதல் இல்லாத கிறிஸ்தவத்தை கட்டி எழுப்புவது மிகக்கடினம்.

**3. கிறிஸ்தவ ஆலோசனைகளா? சிலுவையா? (Christian Counselling Vs Cross)**

கிறிஸ்தவ ஆலோசனை ஊழியங்கள், ஜனங்களை சிலுவையிடமும், சுயவெறுப்புக்கு நேராகவும், ஆவி யானவரின் நிறைவிற்கும் நடத்தாவிட்டால் நாம் சுற்றி சுற்றி வருகிறவர்களாயிருப்போம். நாம் தற்காலிக மருந் தையே அளிப்பதினால் அவர்கள் மறுபடியும் மறுபடி யும் ஆலோசனைகளைத் தேடி வருவார்கள். நாம் சிலுவையினிடம் வரும்போது கிறிஸ்து நமக்காக மரித் தது மட்டுமல்லாது, நாமும் அவருடன் மரித்துள்ளோம் என்பதை காண முடியும். நாம் இப்படி செய்வதன் மூல மாகத்தான் சுயத்திலிருந்து விடுபட்டு வெற்றி வாழ்க்கை வாழ முடியும். ஆலோசனைகள் அநேக நேரங்களில் சிலுவையிடம் ஜனங்களை நடத்துவதில்லை.

**4. அறிவுசார்ந்த சொற்பொழிவா? தேவனிட மிருந்து வரும் பிரசங்கமா? (Manward Homilies Vs Godward Preaching)**

மனிதனுக்காக பிரசங்கமா அல்லது தேவனிடத்தி லிருந்து வரும் செய்தியா? சபையிலுள்ள பெரும்பான் மையினர் தங்கள் சுயதேவைகளைக் குறித்து அதிக அக்கறையுள்ளவர்களாக இருப்பர். பிரசங்கி இதை அறிவதால், சில வசனங்கள், சில மனோத்தத்துவ ஆலோசனைகளைகூறி அவர்களை வீட்டிற்கு அனுப்பி விடுகிறார். இவைகள் தற்காலிக நிவாரணங்களே தவிர மாற்றல்ல. இவர்கள் தேவனை சந்திக்க வேண்டும், தேவனை அறிய வேண்டும். சபையிலே அநேகர் தேவனை அறிவதில்லை.

**5. சட்டரீதியான சமரச பேச்சுவார்த்தையா? வேதாகம ஒப்புரவாகுதலா? (Professional Mediation Vs Bibilical Reconcilation)**

இக்காலகட்டத்தில் சபைகளும், சங்கங்களும் தங்களுக்குள்ள பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள, நீதிமன்றத்தில் வழக்குகளை தொடுப்பது சகஜமாகி விட்டது. 1 கொரிந்தியர் 6ஆம் அதிகார போதனை களுக்கு இது முற்றிலும் எதிரானது. அநேக சபைகளில் இன்று சட்டரீதியாக சமரசம் காண பல இலட்சங்களை வாரி இறைக்கின்றனர்.

ஒப்புரவாகுதலின் ஊழியத்தையும், செய்தியையும் பெற்ற கிறிஸ்தவர்களுக்கு இதில் கவனம் தேவை. இந்த ஒப்புரவாகுதலின் ஊழியத்தில் நாம் முன்னோடிகளாக திகழ வேண்டும். நாம் நீதிமன்றங்களை நாடக்கூடாது.

**6. சுயநோக்கு ஜெபமா? சபையாக இணைந்த ஜெபமா? (Self-Centered Prayers Vs Corporate Public Intercession)**

சிறுகுழுக்களுக்காக நாம் தேவனைத் துதிப்போம். அவைகள் ஆதித்திருச்சபைகளைப்போலவே பழமை வாய்ந்தவை. ஆனால் அநேக நேரங்களில் சிறு குழுக்களில் தனிப்பட்ட தேவைகளுக்காகவே அதிகம் ஜெபிக்கப்படுகிறது. தேசத்திற்காகவும், சுவிசேஷ பணிக் காகவும் ஜெபிக்கும் பரந்த தரிசனம் சிறுகுழுக்களில் அவசியம்.

**7. பாரம்பரியமா? பரிசுத்த ஆவியின் அனுப வங்களா? (Evangelical Orthodoxy Vs Experiential Holy Spirit Encounters)**

நாம் வேதாகம அடிப்படையில் அனைத்தையும் சரியாக செய்வதுபோல செய்து, விசுவாச பிரமா ணங்களை கைக்கொண்டு வாழ்வது ஒரு பக்கம். ஆனால் ஜனங்களை பரிசுத்த ஆவியின் அனுபவத் திற்கு நேராக வழிநடத்துவது மற்றொன்று. அவரே கிறிஸ்து நம்மில் உருவாக்கப்பட அனுப்பப்பட்டவர். அதுவே அவருடைய ஊழியமாயிருக்கிறது. இக் காரியத்தில் நாம் முன்னேறவில்லை.

**8. எதிர்பார்த்து கொடுக்கிறோமா? இராஜியத் திற்காக கொடுக்கின்றோமா? (Kickback Giving Vs Kingdom Giving)**

ஒருமுறை A.B. சிம்சன், “ஏழுவிதமாக கொடுத்தல்” என்ற தலைப்பிலே பிரசங்கித்தார். இதில் ஆறு வகை யான கொடுத்தல் சுயநோக்கு வாய்ந்தவை என்று குறிப்பிட்ட அவர், மறுபடியும் உங்களுக்கு திரும்பிவர இயலாத காணிக்கைகள்தான் தியாகக் காணிக்கைகள்

என்று கூறினார். மிஷனரி பணிக்காகவும், சுவிசேஷ பணிக்காகவும் நாம் கொடுக்கும் காணிக்கை இவ் வகையில் அடங்கும் என்றார்.

**9. புதிய சிலுவையா? பழைய சிலுவையா? (New Cross Vs Old cross)**

A.W. டோசர் என்ற தேவனுடைய மனிதர் பழைய சிலுவை மற்றும் புதிய சிலுவை குறித்து போதித்தார். புதிய சிலுவை பாவியை உருவ குத்துவது கிடையாது. பாவிக்கு ஆலோசனை கொடுக்கிறது. அது அவனை சுத்தப்படுத்தி, சந்தோஷமாக வாழவும், அந்தஸ்துடன் வாழவும் கற்பிக்கின்றது. சுயஉறுதி (Self-Assertive) படைத்தவர்களுக்கு "கிறிஸ்துவில் உன்னை உறுதி செய்துகொள்" என்று கூறுகிறது. பெருமையுள்ள வர்களிடம் "கிறிஸ்துவிடம் பெருமைகொள்" என்று போதிக்கின்றது. கிளர்ச்சியை தேடுவோருக்கு "கிறிஸ்துவிடம் வந்து சந்தோஷமாயிரு" என்று பிரசங்கம் செய்கிறது.

ஆனால் பழைய சிலுவையோ மரணத்தை போதிக்கிறது. அது மனிதனின் சடுதியான முடிவை பிரதி பலிக்கின்றது. ரோம காலத்து சிலுவை சுமப்பவனுக்கு அனைத்தும் முற்றுப்புள்ளிதான் – உலகம், நண்பர்கள் அனைத்தும். அவன் திரும்பி வருவது கிடையாது. தனக்கு ஒரு வாழ்க்கை இல்லை என்பதை அறிவான். தன் ஜீவன் முடியப் போகின்றது என்பதை நன்கு அறிவான். சிலுவை சமரசம் செய்வது கிடையாது. சிலவற்றை சரிசெய்து முன்னேறுவது சிலுவையின் பாதை அல்ல. சிலுவை, மனிதனுக்கு முற்றிலும் முடிவுகட்டி விடும்.

இன்று நாம் ஜனங்களிடம் இந்த "பழைய சிலுவையை" கொண்டு செல்வதில்லை. புதிதான, புதிப்பிக்கப்பட்ட, பளபளக்கும் சிலுவையையே நாம் கொண்டு செல்கிறோம். சிலுவை ஒரு இடறுலுக்கான இடம் என்பதை மறந்துவிடக் கூடாது. அதை நாம் பயன்படுவோருக்கு உகந்ததாய் (User Friendly) மாற்றி அமைக்க முடியாது. இதைத்தான் நாம் செய்ய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் தோல்வியுருகிறோம்.

**10. ஆராதனையை ஆராதிப்பதா? ஆண்டவரை ஆராதிப்பதா? (Worshipping Worship Vs Worshipping God)**

நாம் பற்பல ஆராதனை முறைமைகளை கையாளுகிறோம். எவ்வகை ஆராதனை (பாடல்கள்) நமக்கு உகந்தது என்று நாம் ஓடி அலைகிறோம். ஆனால் ஆராதனை நம்மை திருப்தி செய்வதற்கில்லை. மாறாக, தேவனை ஆராதிக்க என்பதை மறந்து போகிறோம்.

**மாற்றுகளால் உபயோகம் ஒன்றுமில்லை**

நாம் எவ்வளவு நாட்கள் இப்படிபட்ட மாற்றுகளை (Substitutes) வைத்து ஓடிக்கொண்டிருக்க போகிறோம். அதிக நாட்கள் காலம் செல்லாது. தேவன் இப்படிப்பட்ட மாற்றுகளை ஏற்றுக்கொள்வதில்லை. தேவன் காயீனின் காணிக்கைகளை நிராகரித்தார். இதைத்தான் இரண்டா வது கட்டளையில் கூறியுள்ளார்: "ஒப்பான ஒரு சொரூ பத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" (யாத் 20:4). மேலும் அப்போஸ்தலர் 8:8-24ஆம் வசன பகுதிகளில், பணத் தைக் கொண்டு தேவனுடைய கிருபைகளை வாங்க நினைத்த சீமோன் கடிந்துகொள்ளப்படுவதை காண் கிறோம் – "தேவனுடைய வரத்தை பணத்தினாலே சம் பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால்..." வெளிப்படுத்தின விஷேசத்தின் 2 மற்றும் 3ஆம் அதி காரங்களில் இப்படிப்பட்ட மாற்றுகளை நம்பின சபை களை மனந்திரும்பும்படி தேவ ஆவியானவர் கூறினார்.

இப்படிப்பட்ட மாற்றுகளை நாம் வைத்திருப்பதால் தேவனுக்கு கொடுக்க வேண்டிய மகிமையை நாம் கொடுப்பதில்லை. "உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து..." (யாத் 20:5) என்று தேவன் கூறுகிறார். "நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்" (ஏசா 42:8).

இந்த மாற்றுகளால் ஜனங்கள் வழி மாறி போகி றார்கள். எல்லாம் நன்றாக நடக்கின்றது என நாம் எண்ணுகிறோம். ஆனால் அனைத்தும் சரியாக இல்லை. நாம் உடைந்த தொட்டிகளை வைத்து ஓட்டிக் கொண்டிருக்கிறோம்.

இந்த மாற்றுகளை நாம் பயன்படுத்துவதால் நாம் மிகுந்த விலைக்கிரயம் செலுத்த நேரிடும். நமது பிள்ளைகளும் அதன் பின்வரும் சந்ததியும் ஆண்டவரின் அசாதாரண வல்லமையையும், பிரசன்னத்தையும் உணராமலேயே போய் விடுவர்.

மற்றொரு கிறிஸ்தவத்தை அவர்கள் விசுவாசித்து அடுத்து வரும் தலைமுறையினருக்கு கடத்தி விடுவர்.

கிறிஸ்தவம் எப்பொழுதுமே ஒரு தலைமுறையினரால் மறக்கப்படும்போது, முற்றிலுமாக அந்த இடத்திலே மறைந்து போய் விடும். உதாரணத்திற்கு துருக்கி நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள். புதிய ஏற்பாட்டு திருச்சபைகள் நிறைந்த நாடாக அது இருந்தது. இன்று 500 அல்லது 600 கிறிஸ்தவர்களே உள்ளனர் (6 கோடி மக்கள் தொகையில்). கிறிஸ்தவம் அங்கு அழிந்துபோய் கொண்டிருக்கிறது. நாம் மாற்றுகளை வைத்து சபையை நடத்த முடியாது.

என் வயதிற்கு நான் சங்கீதம் 71:17,18ஐ ஜெபமாக ஏறெடுக்கின்றேன்: "தேவனே, என் சிறுவயது முதல் எனக்குப் போதித்து வந்தீர்; இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிந்து வந்தேன். இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும் வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும் முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக."

நான் நாம் வாழும் தலைமுறையினருக்குத்தான் பொறுப்பு என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நான் இதை இப்பொழுது நம்புவது கிடையாது. நாம் இந்த தலைமுறைக்கும், அடுத்து வரும் தலைமுறையினருக்கும் பொறுப்பு. அடுத்த தலைமுறை நமது பிள்ளைகளின் தலைமுறை என்பதை மறக்க வேண்டாம். அடுத்தடுத்த தலைமுறையினருக்கு நம் விசுவாசத்தை நாம் கடத்த வேண்டும்.

நம் தேவன் ஆபிரகாமின், ஈசாக்கின், யாக்கோபின் தேவனாயிருக்கிறார். ஆயிரம் தலைமுறையினருக்கு இரக்கம் செய்கிறவராயிருக்கிறார். ஒவ்வொரு தலைமுறையினரும் வேத சத்தியங்களை அடுத்து வரும் தலைமுறையினருக்கு கடத்த வேண்டும். நாம் ஒரு தலைமுறையைக்கூட இழக்கக்கூடாது.

**இரகசியம் என்ன?**

அசாதாரண நிகழ்வுகளை நமது பிள்ளைகள் காண வேண்டும். "தேவனுடைய கிரியை", "வல்லமை", "அற்புதங்கள்" - இப்படிப்பட்ட பதங்களை நமது பிள்ளைகள் அறிய வேண்டும். தேவனை விசுவாசித்து

**நான் நாம் வாழும் தலைமுறையினருக்குத்தான் பொறுப்பு என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நான் இதை இப்பொழுது நம்புவது கிடையாது.நாம் இந்த தலைமுறைக்கும், அடுத்து வரும் தலைமுறையினருக்கும் பொறுப்பு. அடுத்த தலைமுறை நமது பிள்ளைகளின் தலைமுறை என்பதை மறக்க வேண்டாம். அடுத்தடுத்த தலைமுறையினருக்கு நம் விசுவாசத்தை நாம் கடத்த வேண்டும்.**

பெரிய காரியங்களை செய்ய வேண்டும். சபையின் முற்பிதாவான அகஸ்டின் அவர்கள் கூறுவதைபோல, "ஒவ்வொரு தலைமுறையினரும் தங்களின் மூத்த தலைமுறையினரின் தோளில் நின்று கொண்டு, மென்மேலும் உயர எழும்ப வேண்டும்." இதுவே எனது ஜெபமாகவும் இருக்கிறது.

6 வருடங்களுக்கு முன்பு, ஸ்தானிய சபைகளில் எழுப்புதல் வர நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். நல்ல தெய்வீக சபைத் தலைவர்களும், சங்கத் தலைவர்களும் எழும்ப ஜெபித்துக் கொண்டிருந்தேன். இந்த தரிசனத்தில் எனக்கு மிகவும் உற்சாகம் அளித்தது, புதிதாக இணைந்துள்ள இளைய போதகர்களே!

ஆ! ஆண்டவரே! நாங்கள் மாற்றுகளை பயன்படுத்துவதால், அதிக விலைக்கிரயம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

''சபைகளிலே எழுப்புதலை கொண்டுவர ஊழியர்களையும் எழுப்பி அனுப்பும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

(1998 ஆம் ஆண்டு லான்காஸ்டர், பென்சல்வேனியா நகரத்தில் நடைபெற்ற "எழுப்புதலுக்கான இதயக் கதறல்" என்ற கருத்தரங்கில் அளிக்கப்பட்ட செய்தியின் தொகுப்பு)

# நமது குழந்தைச் செல்வங்கள்!

நமது மிஷனரிகளின் குழந்தைகளது (25 வயது வரையுள்ள) பெயர்கள் பிறந்த தேதியுடன் இங்கு தரப்பட்டுள்ளன. தந்தையின் பெயர் இரண்டாவதாக உள்ளது. பிசாசின் பிடியில் கட்டுண்டோரை விடுதலை செய்ய முன்னணியில் நிற்கும் இப்பெற்றோரின் குழந்தைகளே சத்துருவிற்கு முக்கியக் குறி. சிறுவன் சாமுவேலைக் குறித்து எழுதப்பட்டுள்ளவை இப்பிள்ளைகளின் வாழ்விலும் நிறைவேறக் கருத்தாய் ஜெபியுங்கள். "சாமுவேல் வளர்ந்து, கர்த்தருக்கும் மனிதருக்கும் பிரியமாக நடந்துகொண்டான்" (1 சாமு 2:26). *ஆசீர்வாத இளைஞர் இயக்கம், சர்ச் காலனி, வேலூர் 632 006, இந்தியா* என்ற விலாசத்திற்கு பிறந்தநாள் வாழ்த்துகள் அனுப்பி இவர்களை உற்சாகப்படுத்தலாம். இப்பக்கங்களைப் பிரித்தெடுத்து உங்கள் வேதத்திற்குள் அல்லது தினசரி தியான நூலுக்குள் வைத்து ஜெபிக்கலாம்.

| | |
|---|---|
| 1. எலிஷா பரத் வசாவா | 02 ஜன 2008 |
| 2. டானிஷா செல்வின் | 04 ஜன 2009 |
| 3. பிரத்யுஷ் ரபிந்திர குஷா | 05 ஜன 2014 |
| 4. விகாஸ் சாது சிந்தாமன் | 05 ஜன 2005 |
| 5. ஸப்னா ஹரிராம் K. | 06 ஜன 1999 |
| 6. குர்பான் சாம்ராஜ் ரூபன் | 06 ஜன 2010 |
| 7. மகிமா ஜான் மில்டன் | 06 ஜன 2010 |
| 8. பிகாஷ் மண்டி | 07 ஜன 2000 |
| 9. ஜெசிந்த் பிரெய்னார்ட் பிரமன் | 08 ஜன 2008 |
| 10. ஆராதனா ராஜசேகரன் | 08 ஜன 2014 |
| 11. சஸ்மிதா நேத்ரானந்தா டோங்கிரி | 09 ஜன 1998 |
| 12. ஜஸ்டின் தாமஸ் ஜேம்ஸ் | 10 ஜன 2011 |
| 13. ஷில்பிதா கிளாடிஸ் சரோஜ் | 11 ஜன 2008 |
| 14. பிரஷித் சச்சின் | 11 ஜன 2011 |
| 15. ஜோசுவா ஜெயக்குமார் | 14 ஜன 2003 |
| 16. ஹர்ஷ் கிஷோர் காத்தே | 15 ஜன 2011 |
| 17. ஜெமிமா டைட்டஸ் பரஜா | 17 ஜன 2005 |
| 18. சமர்ப்பன் சுபாஷ் நலவடே | 17 ஜன 2008 |
| 19. ரிஜாய்ஸ் கிஷோர் ஜகத் | 18 ஜன 2004 |
| 20. மது ராஜு அஹிர்வார் | 18 ஜன 2013 |
| 21. ஜேனஸ் அச்சால் ஜெயக்குமார் | 19 ஜன 2002 |
| 22. நம்ரதா ஜித்தேந்தர துக்காராம் | 19 ஜன 2011 |
| 23. ஆனி சூசன்னா ராமநாதன் | 19 ஜன 2012 |
| 24. திருப்தி ராமதாஸ் அந்தேர் | 22 ஜன 2015 |
| 25. மிகாவேல் மோன்டுகர் | 25 ஜன 2018 |
| 26. விஷால் சாது சிந்தாமன் | 25 ஜன 2000 |
| 27. அபிஷேக் கிப்ட்ஸன் ஜேம்ஸ் | 25 ஜன 2010 |
| 28. ஜெனின் பால் லக்ஷ்மணன் | 26 ஜன 2007 |
| 29. லிஸா பிரியங்கா துக்கு கோஸ்லா | 26 ஜன 2011 |
| 30. சந்திரசேகர் சிவராம் ரோஷன் | 31 ஜன 2003 |
| 31. பிரதிக் பிளெஸ் ரபிந்திர குஷா | 02 பிப் 2011 |
| 32. சாம் துரைராஜ் மோகன்ராஜ் | 02 பிப் 2016 |
| 33. ஆல்வின் பெலிக்ஸ் செல்வின் | 06 பிப் 2010 |
| 34. நோவாசன் நபின் நந்தா | 08 பிப் 2012 |
| 35. அக்ஷயா யுவராஜ் | 09 பிப் 2014 |
| 36. மகிமா ஸ்டான்லி தாமஸ் | 09 பிப் 2019 |
| 37. ஸ்டீபனாஸ் சோமசுந்தரம் | 12 பிப் 2008 |
| 38. சந்தேஷ் சத்வி மோதிராம் | 12 பிப் 2012 |
| 39. பிரின்ஸ் தனபதி சான்த்தா | 14 பிப் 2010 |
| 40. சினேஹலதா உமாகாந்த் சாகர் | 14 பிப் 2010 |
| 41. கிரேஸ்ராஜ் பிலோத் மண்டி | 15 பிப் 1998 |
| 42. ரூபஸ் பில்லிகிரஹாம் எபிநேசன் | 17 பிப் 1998 |
| 43. ஹேமலதா நாகப்பா | 17 பிப் 2000 |
| 44. ஷேரன் ஜேம்ஸ் | 17 பிப் 2007 |
| 45. ஸ்நேகா இம்ரத் அஹிர்வார் | 20 பிப் 2008 |
| 46. கிரிஸ்பஸ் தனபதி சான்த்தா | 20 பிப் 2014 |
| 47. ஈப்ரிம் ஜேசன் | 21 பிப் 2007 |
| 48. பிரெய்னார்ட் சாம் மாடசாமி | 21 பிப் 2009 |
| 49. சந்தீஷ் பவதீஷ் சித்ஹி | 23 பிப் 2009 |
| 50. ஜெசி ஜாய் நம்பூரி | 25 பிப் 2010 |
| 51. ஜெசிந்தா லஷ்மணன் | 01 மார் 2009 |
| 52. டேவிட் ரகுமந்தா | 01 மார் 2015 |
| 53. அம்லன் சூரியகாந்த் சாகர் | 01 மார் 2018 |
| 54. பிரின்ஸ் சாலமோன் கொலோரி | 05 மார் 2009 |
| 55. பிரைசிலின் ட்ரிபினா எபிநேசன் | 08 மார் 2000 |
| 56. தீப்சந்த் கோமல் பிரசாத் | 10 மார் 1997 |
| 57. அர்பிதா அம்மி சூரியகாந்த் சாகர் | 11 மார் 2009 |
| 58. பிரெய்சி கிறிஸ்டினா குமார் | 12 மார் 2012 |
| 59. ஆஷா ஸ்லெஸர் ராமநாதன் | 13 மார் 2000 |
| 60. செலஸ்டி சைத்தன் பாங்கி | 14 மார் 2000 |

| | | |
|---|---|---|
| 61. | பிரில்லியன்ட்சன் கிறிஸ்டோதாஸ் | 15 மார் 2006 |
| 62. | ரூபலேகா சேவியர் பாபு | 15 மார் 2014 |
| 63. | சாத்விக் சாந்த கௌடா | 15 மார் 2015 |
| 64. | பிரின்ஸி சுவேதா சுயம்பு | 16 மார் 2009 |
| 65. | ஹர்ஷா ஜோசப் | 16 மார் 2017 |
| 66. | நிகில் துக்கு கோஸ்லா | 18 மார் 2013 |
| 67. | ஆமோஸ் ஜேசுராகவன் | 21 மார் 1997 |
| 68. | பிரர்னா குமாரி மோகந்தி தாக்ரே | 23 மார் 2004 |
| 69. | ஷேரோனா அம்மி சூரியகாந்த் சாகர் | 24 மார் 2006 |
| 70. | மம்தா சச்சின் | 26 மார் 2009 |
| 71. | வினந்தி கல்பேஷ் | 26 மார் 2011 |
| 72. | பெனிசன் கிறிஸ்டோதாஸ் குல்திப் | 30 மார் 2000 |
| 73. | அனில் ஹரிராம் | 31 மார் 2006 |
| 74. | லஷ்மிநாராயன் சௌதிரி | 01 ஏப் 2002 |
| 75. | யெஹோசுவா பிரதீப் ராஜ்வாடி | 01 ஏப் 2009 |
| 76. | சில்வனாஸ் சோமசுந்தரம் | 02 ஏப் 2012 |
| 77. | ஷாலோம் ஜோசுவா சாத்ராக் | 03 ஏப் 2009 |
| 78. | பிரியங்கா ஜித்தேந்தர துக்காராம் | 04 ஏப் 2002 |
| 79. | ஜெலின் ஷ்ருதி அருண் | 06 ஏப் 2003 |
| 80. | ஜேயல் சாமுவேல் வசாவா | 08 ஏப் 2012 |
| 81. | சோனு கோமல் பிரசாத் | 11 ஏப் 1999 |
| 82. | ஜோனத்தான் ஜார்ஜ் ஆலம்பி | 11 ஏப் 2008 |
| 83. | ஸ்டான்லி யெமிநடே ஸ்ரீகாந்த் | 11 ஏப் 2019 |
| 84. | ஜோன்னா சகரியா | 12 ஏப் 2018 |
| 85. | அபிஷேக் கணேஷ் கடம் | 14 ஏப் 2002 |
| 86. | ஜேக்கின் லூர்து சேவியர் | 14 ஏப் 2014 |
| 87. | ஜோன்ஸ் ஆபிரகாம் ஜான் | 14 ஏப் 2015 |
| 88. | ஆக்னஸ் கிறிஸோலைட் விக்டர் | 15 ஏப் 2010 |
| 89. | தெபோரா தனராஜ், T. | 16 ஏப் 1996 |
| 90. | ஜோதி மன்டா நரேஷ் | 16 ஏப் 1995 |
| 91. | புஷ்பாஞ்சலி சபர் | 17 ஏப் 2003 |
| 92. | ஃபின்னி சார்லஸ் விஜயகுமார் | 18 ஏப் 2000 |
| 93. | சூசன்னா சுசாந்த் டிகால் | 18 ஏப் 2000 |
| 94. | ஜெனிபர் கெசியா ஜெரேமியா | 19 ஏப் 2001 |
| 95. | கரீஷ்மா சாதுராம் சௌதிரி | 21 ஏப் 1998 |
| 96. | ஜூலி அஷோக்குமார் | 21 ஏப் 2000 |
| 97. | ரூத் ஏஞ்சல் கிஷோர் ஜகத் | 21 ஏப் 2001 |
| 98. | சைமன் போஸ்டம் பாக் | 23 ஏப் 1999 |
| 99. | மேத்யு மோசஸ் ஜெப தினகரன் | 23 ஏப் 2006 |
| 100. | அபெக்ஷா சஞ்சய் கானே | 23 ஏப் 2009 |
| 101. | அமிஷா சஞ்சய் கானே | 25 ஏப் 2003 |
| 102. | ஈனோஸ் அப்பலசாமி | 26 ஏப் 2011 |
| 103. | அலிபா ருசாவ் சாகர் | 27 ஏப் 2011 |
| 104. | மெர்வின் மாத்தையன் | 27 ஏப் 2010 |
| 105. | ஜெரேமியா ஜார்ஜ் ஆலம்பி | 29 ஏப் 2015 |
| 106. | ஸ்துதிகர் எலியா ரத்னாகர் ராவ் | 30 ஏப் 2001 |
| 107. | கேரன் ஹாபக் பவார் | 01 மே 2001 |
| 108. | பிரீத்தி கண்பத் திவாகர் | 04 மே 2001 |
| 109. | கிப்டா பாக்கியராணி சாமிதாஸ் | 05 மே 1996 |
| 110. | தர்ஷினி சூனேம் கதிர்வேல் | 08 மே 2009 |
| 111. | சத்தியஜித் சாலமோன் மன்டிங் | 09 மே 2008 |
| 112. | அபிகாயில் லீன்ஸ் ஜோயல் | 09 மே 2011 |
| 113. | ரியா பிரெய்சி பிரேம்குமார் | 10 மே 2003 |
| 114. | சுமீத் சாலமோன் தாஸ் | 10 மே 2004 |
| 115. | பிலெஸ்ஸி ராணி தயாதான் பாத்ரோ | 13 மே 2009 |
| 116. | பிரதீப் பிரபுதாஸ் பாத்ரோ | 15 மே 2004 |
| 117. | அஷ்வினி சௌதிரி | 15 மே 1997 |
| 118. | ஃபானி கிராஸ் பாக்கியவதன் | 15 மே 2006 |
| 119. | வந்தன குமாரி லீலன் | 16 மே 2002 |
| 120. | ஷ்ரத்தா மானே | 16 மே 2008 |
| 121. | இனியா எல்சன் | 16 மே 2015 |
| 122. | பிரார்த்தனா ராஜு குரானே | 17 மே 2004 |
| 123. | நெகேமியா வெஸ்லி ஜெய்சங்கர் | 19 மே 1998 |
| 124. | ஆனந்த் பிரமம் செல்லா | 21 மே 2009 |
| 125. | இஷிகா பரத் வசவா | 25 மே 2006 |
| 126. | ஜகுருதி ஜித்தேந்தர துக்காராம் | 28 மே 2007 |
| 127. | க்குருதி கல்பேஷ் | 31 மே 2019 |
| 128. | சோமியா ராணி தயாதான் பாட்ரோ | 02 ஜூன் 2012 |
| 129. | மெர்லின் மோகனகிருஷ்ணன் | 02 ஜூன் 2007 |
| 130. | ஹேமலதா அனிதா அருண் | 03 ஜூன் 1995 |
| 131. | கௌரவ் தன்வர் | 03 ஜூன் 2008 |
| 132. | ரெபேக்கா பரசுராம் நேதம் | 03 ஜூன் 1999 |
| 133. | பிரமிதா நேத்ரானந்தா டோங்ரி | 04 ஜூன் 2001 |
| 134. | சைமன் கோதர்பாய் | 04 ஜூன் 2008 |
| 135. | நிபேதிதா பகவான் பாங்கி | 06 ஜூன் 1996 |
| 136. | மோத்தி ரஞ்சன் சஞ்ஜிப் | 07 ஜூன் 1997 |
| 137. | கீர்த்தி கிரண் தன்வர் | 08 ஜூன் 2016 |
| 138. | எல்ஜிவா ஏஞ்சலின் பால் டேவிட் | 09 ஜூன் 2004 |
| 139. | சுகந்தி ஹிரண் கோஸ்லா | 11 ஜூன் 1998 |
| 140. | ஜெரோலின் ஜான் பாண்டியன் | 11 ஜூன் 2016 |

141. ஜெரோம் பால் பிரகாசம் 11 ஜூன் 2016
142. மேரி ஐடா ஜெய்சங்கர் 12 ஜூன் 2006
143. ஆயுஷ் லக்ஷ்மன் ஷேலர் 12 ஜூன் 2014
144. காலேப் செழியன் 15 ஜூன் 1995
145. மெர்ஸி அபிமன்யூ பத்ரா 15 ஜூன் 2001
146. சந்தீப் அஷோக்குமார் 16 ஜூன் 1996
147. ஃபெய்த் ஃபிளாரன்ஸ் சுதாகர் 16 ஜூன் 2006
148. விஷாகா சாது சிந்தாமன் 16 ஜூன் 2003
149. ஜோனத்தன் ஜெபதினகரன் 18 ஜூன் 2004
150. பிரெய்சி சுரேஸ் பாபு 18 ஜூன் 2016
151. நான்சி அந்தோனிசாமி 21 ஜூன் 2008
152. எல்சா ஜெர்சிலின் ராஜா 21 ஜூன் 2017
153. பிரசன்னா ரோஸ் ஆலன் 22 ஜூன் 2005
154. க்ருபா சஞ்சய் காம்ளே 22 ஜூன் 2011
155. ஜெஸ்மன் ஜெரேமியா 25 ஜூன் 2003
156. லின்ஸி ஹிரண் கோஸ்லா 26 ஜூன் 2001
157. பூனா கண்பத் பிரசாத் 30 ஜூன் 1996
158. ஜெனிட்டா ஆல்பர்ட் ஜெயராஜ் 30 ஜூன் 2002
159. அர்ச்சனா ஹரிராம் 01 ஜூலை 1995
160. வேரோனிக்கா ஜோசப் சாமுவேல் 01 ஜூலை 2019
161. அங்கிதா ஆஷிஷ் தீப் 03 ஜூலை 2005
162. பிளஸ்ஸன் ரவீந்திரன் 05 ஜூலை 2004
163. லிடியா ஆக்னஸ் மோஹன்ராஜ் 08 ஜூலை 2010
164. டாரதி தனராஜ் 09 ஜூலை 1998
165. ஜெஸ்லியா ஜெயராஜ் 09 ஜூலை 1999
166. ஜெரிஸியா ஜெயராஜ் 09 ஜூலை 1999
167. பிளஸ்ஸிராணி பிலோத்மன்டி 11 ஜூலை 2002
168. அருளரசி பால் வசந்தராஜ் 11 ஜூலை 2004
169. லயணல் ராபின்சாம் 13 ஜூலை 1997
170. ரூபன் சுபானந்த் சித்ஹி 15 ஜூலை 1999
171. சந்தியா அஷோக்குமார் 15 ஜூலை 1999
172. சத்யஜோதி போஸ்டம் பாக் 15 ஜூலை 2001
173. மில்கி தனோ சான்த்தா 15 ஜூலை 2009
174. விவேக் டேனியல் மசி 16 ஜூலை 2004
175. உடாஹர்ஷ் மோதிராம் சத்வி 16 ஜூலை 2015
176. அபிலாஷா பல்டு 18 ஜூலை 2006
177. யோயல் சாமுவேல் வசவா 19 ஜூலை 2018
178. ஜோசுவா ஜோசப் 20 ஜூலை 2018
179. ரொனால்ட் ரபிந்தரநாத் தாஸ் 21 ஜூலை 2003
180. சோனம் ஹரிராம் 21 ஜூலை 2002
181. ஹேனா சுயம்பு செல்வம் 23 ஜூலை 2011
182. ஜாய் நபின்குமார் நந்தா 24 ஜூலை 2008
183. பாலின் சுப்ரிதா அருண் 27 ஜூலை 2006
184. ஜெஸ்வின் குமார் ஜேமஸ் 30 ஜூலை 2013
185. பெனிட்டா ஆல்பர்ட் ஜெயராஜ் 30 ஜூலை 2000
186. அஷ்வினி இம்ரத் அஹிர்வார் 31 ஜூலை 2005
187. டேனியல் சதா நாக் 01 ஆகஸ் 1997
188. பிரெய்சி பிரபுதாஸ் பட்ரோ 02 ஆகஸ் 2005
189. அருணா கோதர் பாய் 03 ஆகஸ் 2006
190. ஜெடிடியா ஜெயராஜ் 06 ஆகஸ் 1996
191. மேக்தலின் ரவீந்திரன் 06 ஆகஸ் 2007
192. பிரபு பெரியசாமி 07 ஆகஸ் 2003
193. இச்சா கண்பத் மாதவி 07 ஆகஸ் 2017
194. பிட்யுத் பிலேந்திர மன்டி 08 ஆகஸ் 2002
195. பால் ரீச்சர் பெருமாள் 09 ஆகஸ் 2007
196. ரவிசங்கர் ஹரிராம் 10 ஆகஸ் 1996
197. பிரஜ்வால் நீலப்பா 10 ஆகஸ் 2005
198. ஸ்தேவான் சாமுவேல் ராகுட்டே 11 ஆகஸ் 2009
199. ஸ்ருஷ்டி சாந்த கௌடா 12 ஆகஸ் 2005
200. ஆமோஸ் இம்ரத் அஹிர்வார் 14 ஆகஸ் 2003
201. ஷக்கினா ரத்னாகர் ராவ் 15 ஆகஸ் 2004
202. சமர்ப்பண் சுபாஷ் வாக்மாரே 16 ஆகஸ் 2006
203. அர்பண் லக்ஷமன் ஷேலர் 16 ஆகஸ் 2011
204. விஜய் ஹனமன்தா 16 ஆகஸ் 2015
205. உன்னதி கணேஷ் சாத்வி 18 ஆகஸ் 2013
206. அதிரா ஜேயல் குருபிரசாத் 19 ஆகஸ் 2016
207. சாத்விகா ரமணா 20 ஆகஸ் 2003
208. பிரியான்சு ஷஷிகாந்தா பாரிக் 21 ஆகஸ் 2015
209. ரூபன் அஜய் சுனா 22 ஆகஸ் 1998
210. ஜாண் ரிச்சர்ட்சன் பிரேம்குமார் 23 ஆகஸ் 1999
211. ஸ்துதி சாமுவேல் ராகுட்டே 23 ஆகஸ் 2002
212. நான்சி ராபின்சன் கில்பர்ட் 23 ஆகஸ் 2003
213. தர்ஷினி சதா நாக் 24 ஆகஸ் 2010
214. ஆசீஷ் சைத்தன் பாங்கி 24 ஆகஸ் 2010
215. கிருபாகரன் துரை 26 ஆகஸ் 1998
216. விமோசனா ஹனமந்தா 26 ஆகஸ் 2017
217. வின்சன் மாத்தயன் 26 ஆகஸ் 2013
218. சைமன் மோசஸ் துருக் 27 ஆகஸ் 2012

219. மெர்லின் ரோஷி தனேஸ்வர் 28 ஆகஸ் 2001
220. எஸ்தர் சித்தப்பா 29 ஆகஸ் 1998
221. ஆசீஷ் ரபிந்திர ஜென்னா 30 ஆகஸ் 2004
222. பிளஸ்ஸன் கிறிஸ்டோதாஸ் 30 ஆகஸ் 2002
223. ஜெஸி வடிவேல் ஜேம்ஸ் 02 செப் 2010
224. சுக்வான்சில் ரவீந்திரநாத் தாஸ் 03 செப் 2006
225. ஜோதி பிரகாஷ் ருசவ் சாகர் 03 செப் 2005
226. சுதர்ஷன் நலவடே 04 செப் 2005
227. ஏமி காருண்யா சுதாகர் 06 செப் 2008
228. பிரீத்தி சேவியர் பாபு 07 செப் 2016
229. பிரின்ஸ் ஜாய்சுரன் கொலோரி 08 செப் 2012
230. சுசில்குமார் சுரேஷ் சான்த்தா 09 செப் 2000
231. சுஷாந்தி பரசுராம் 09 செப் 1996
232. கிரேஸ்மா ஸ்மைலின் சைமன் 10 செப் 2005
233. ஆலிஸ் ரத்தோட் குமார் 10 செப் 2009
234. சந்தேஸ் காம்ளே 10 செப் 2015
235. பபித்ர நேத்ராநந்தா 11 செப் 2003
236. அகல்யா யுவராஜ் 11 செப் 2012
237. ஏனோக் சுபானந்த் சித்ஹி 12 செப் 1997
238. பால் ரேவன் ராஜசேகரன் 12 செப் 2012
239. அலிஷா கிளாடிஸ் மோகன் 12 செப் 2017
240. பென்னி பால் ஆபிரகாம் 13 செப் 2004
241. அபிஷேக் ப்ரூஸ் விக்டர் 15 செப் 2006
242. மேரி ஸ்லெஸர் முருகன் 16 செப் 1996
243. அபிஷேக் அபிமன்யூ 16 செப் 2006
244. ஆஷிஸ் உமாகாந்த் சாகர் 17 செப் 2008
245. ஜேக் ஸ்டெயின்ஸ் குமார் 19 செப் 2009
246. சுப்ரிதா பவதீஸ் சித்ஹி 20 செப் 2004
247. ஷாக்ஷிதா கிரேஸ் சரோஜ் 21 செப் 2012
248. ரூபேந்திரா அஜய் சுனா 22 செப் 2001
249. ஜோதிராஜ் ஹில்சன் மோசஸ் 23 செப் 2005
250. சாம்ராஜ் சைலஸ் கோஸ்லா 26 செப் 1998
251. மஹிமா டேனியல் மசி 28 செப் 2015
252. அபிஷேக் புஷ்பராஜ் 29 செப் 2000
253. அஜித்குமார் கைலாஷ் நாக் 29 செப் 2005
254. பிரபாசினி சுரேஷ் சாந்தா 01 அக் 1997
255. ருச்சிலின் தானேஸ்வர் ஜெனா 02 அக் 2003
256. ரூபன் பபித்ர குமார் 02 அக் 2011
257. தேவராஜ் ஹார்வஸ்ட் மோசஸ் 03 அக் 2004
258. ஐசக் ஜீவா மோகன் 03 அக் 2015
259. ருத்துஜா ராஜு குரானே 03 அக் 2000
260. சுப்ரான்ஷு ஸ்ரீகாந்த் பாரிக் 05 அக் 2008
261. பிரஹிக்ஷா கண்பத் பிரசாத் 05 அக் 2006
262. ஜோதிர் ரபிந்திர ஜென்னா 05 அக் 2005
263. பியூலா பிரெய்சி விநாயகம் 06 அக் 1995
264. ஏஞ்சல் மோன்டுகர் 06 அக் 2013
265. சன்ஸ்குருத்தி கிஷோர் 07 அக் 2014
266. ஹேமலதா உமாகாந்த் சாகர் 08 அக் 2004
267. ஏலீம் ரத்தோட் குமார் 10 அக் 2015
268. ப்ரக்லீன் லக்ஷ்மன் டடிங்கி 10 அக் 2013
269. ஆஷிர் டேனியல் ராமநாதன் 11 அக் 1996
270. ராக்லண்ட் விஜயகுமார் 13 அக் 1996
271. மனிஷ்லா பால்சந் பிரசாத் 13 அக் 2003
272. கிறிஸ்டோஃபினி மகேந்திரபால் 14 அக் 1998
273. பிரகாஷினி கண்பத் பிரசாத் 15 அக் 2003
274. ஹெப்சிபா ஜான் மெல்பின் 16 அக் 2014
275. ஜோதி கண்பத் பிரசாத் 16 அக் 2010
276. பிளஸ்ஸன் சந்திர பாரிக் 16 அக் 2018
277. அபிஷேக் பல்டு 17 அக் 2007
278. ஷேரன் ஜோஸபின் ஷாத்ராக் 17 அக் 2006
279. டேனியல் பால் ராஜு சபித்தி 18 அக் 2017
280. அனுரக் சுரேஸ் பாபு 18 அக் 2011
281. அதிசயா எல்சன் 19 அக் 2012
282. சந்தீப் ஷிவ்ராம் ரோஷன் 20 அக் 1995
283. கிரேஸ்சி கோப்பன் பாக் 22 அக் 2013
284. பிலெஸ்ஸி சைத்தன் பாங்கி 23 அக் 2004
285. தீபக் ஷிவ்ராம் ரோஷன் 23 அக் 1998
286. ஜான் வெஸ்லி யாக்குபு நம்பூரி 24 அக் 2011
287. பிரவீன் அப்பலசாமி 27 அக் 2006
288. எஸ்தர் ஜிட்கு சான்த்தா 28 அக் 1997
289. பிரவீன் குமார் மோகந்தி தாக்ரே 28 அக் 2001
290. அஷ்வின் ஸ்டான்லி மைலாப்பு 29 அக் 2017
291. மிருதுளா கேசவன் 01 நவ 1998
292. ஸ்ருஷ்டி சுபாஷ் வாக்மாரே 01 நவ 2007
293. ரோஷ்னி ஷிவ்ராம் ரோஷன் 02 நவ 2002
294. தீப்சந்த் அஷோக்குமார் 04 நவ 1995
295. அர்ச்சனா பால் டிசோசா 04 நவ 2009
296. சாரா ஜிட்கு சான்த்தா 06 நவ 1995
297. சுனில் கோமல் பிரசாத் 07 நவ 1995
298. இம்மானுவேல் கதிர்வேல் 10 நவ 2014

| | | |
|---|---|---|
| 299. | லாரன்ஸ் தானேஷ்வர் ஜெனா | 11 நவ 2006 |
| 300. | பிரீத்தி பெரியசாமி | 12 நவ 2000 |
| 301. | ஐடா ஜெனிமா மோகன் | 13 நவ 2013 |
| 302. | ரோஸ்லின் ராஜாமணி | 16 நவ 2004 |
| 303. | கேண்டிடா ஜூலியஸ் | 17 நவ 1997 |
| 304. | ரீனா பபித்ர குமார் பாக் | 18 நவ 2007 |
| 305. | அப்போலோஸ் பரத் வசவா | 19 நவ 2010 |
| 306. | ஜீவானந்தம் சக்திவேல் | 19 நவ 2002 |
| 307. | எஸ்தர் பால் டேவிட் | 22 நவ 2007 |
| 308. | சந்தன் சபர் | 22 நவ 2000 |
| 309. | சாமுவேல் ராஜு அஹிர்வார் | 22 நவ 2016 |
| 310. | சுபாஸ்சிஷ் ரபிந்திர ஜென்னா | 23 நவ 2008 |
| 311. | பிரின்ஸ் சஷிகாந்தா பாரிக் | 24 நவ 2011 |
| 312. | ரச்சனா லீலன் பன்ஸ்கர் | 25 நவ 1998 |
| 313. | டின்டேல் சரவணன் | 25 நவ 1997 |
| 314. | பிரைட்டா சாம் மாடசாமி | 25 நவ 2010 |
| 315. | கால்வின் செழியன் | 26 நவ 1998 |
| 316. | ஸ்சாக் குருபிரசாத் | 26 நவ 2019 |
| 317. | ஜோசப் ரகுமந்தா | 27 நவ 2011 |
| 318. | நவீன் நாகப்பா | 28 நவ 1998 |
| 319. | நீட்டா சரவணன் | 28 நவ 2001 |
| 320. | கார்முகில் துரை | 30 நவ 1996 |
| 321. | திப்திமயா சஞ்ஜீப் தீப் | 30 நவ 2006 |
| 322. | டேனியல் பால் வசந்தராஜ் | 30 நவ 2006 |
| 323. | ஜான்சன் சித்தப்பா | 01 டிச 1995 |
| 324. | நிகில் நாகப்பா ஜான்சன் | 03 டிச 2001 |
| 325. | பிரதீப் தனோ சான்த்தா | 04 டிச 2003 |
| 326. | சுமித் சாமுவேல் ஹன்தால் | 05 டிச 2010 |
| 327. | மெர்சி பின்ட்டு பாக் | 06 டிச 2018 |
| 328. | மகிமா கேசவன் | 07 டிச 1996 |
| 329. | பிளஸ்ஸன் குமார் கொயாராம் | 07 டிச 2009 |
| 330. | சம்யஜித் சாலமோன் மன்டிங் | 07 டிச 2013 |
| 331. | க்ருபா சகரியா | 08 டிச 2016 |
| 332. | பிரகதி ராம்தாஸ் | 08 டிச 2011 |
| 333. | சாந்தாராஜ் சைலஸ் கோஸ்லா | 09 டிச 1996 |
| 334. | ஆஷா ஹிரோன் கோஸ்லா | 09 டிச 1996 |
| 335. | பெர்ஸியா பாக்கியவதன் | 10 டிச 2003 |
| 336. | மாரநாதா மகேந்திரபால் | 11 டிச 1996 |
| 337. | விஷன் குமார் கோயாராம் பாகேல் | 11 டிச 2006 |
| 338. | சாதனா குமாரி லீலன் | 13 டிச 2000 |
| 339. | நகோமி லஷ்மணன் | 13 டிச 2002 |
| 340. | ஜெர்மி டைட்டஸ் பரஜா | 14 டிச 2002 |
| 341. | ரெபெக்கா ராஜு குரானே | 15 டிச 2005 |
| 342. | டீனா கிரேஸ் பெருமாள் | 15 டிச 2010 |
| 343. | ஜோஹன்னா சுசாந்த் டிகால் | 17 டிச 2001 |
| 344. | கரோலின் லீன்ஸ் ஜோயல் | 18 டிச 2007 |
| 345. | ஜேடன் பால் பிரகாசம் | 18 டிச 2012 |
| 346. | சீகன்பால் ஜான் மில்டன் | 21 டிச 2005 |
| 347. | பிரான்சிஸ் ஆஷிஷ் தீப் | 22 டிச 2009 |
| 348. | அனுஷ்யா ஜோஸ்லின் மைலாப்பு | 23 டிச 2009 |
| 349. | நிக்சன் டேவிட் குமார் | 24 டிச 2002 |
| 350. | சாமுவேல் ராஜாமணி | 24 டிச 2002 |
| 351. | சுரபி சஞ்ஜிப் தீப் | 25 டிச 2001 |
| 352. | பிரியதர்சினி சுஸ்ரீ ஸ்ரீகாந்த் பாரிக் | 25 டிச 2006 |
| 353. | பிரிஸ்கில்லா பிரதீப் ராஜ்வாடி | 25 டிச 2010 |
| 354. | பிரதிக் நீலப்பா | 27 டிச 2006 |
| 355. | ஜான் பால் புஷ்பராஜ் | 29 டிச 1997 |
| 356. | சாம் ஜெயந்தன் சக்திவேல் | 29 டிச 1999 |

**எங்களுக்காக ஜெபியுங்கள்!**



எங்கள் பெற்றோர் ஆன்மீக யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் எங்கள் பாதுகாவலுக்காக ஜெபியுங்கள்.
ஆன்மீக வாழ்வில் வளரவும் எங்கள் பெற்றோரின் வழியில் நடக்கவும் எங்களுக்காக ஜெபியுங்கள்.
படிப்பில் சிறப்பெய்தி தேவனுக்கு மகிமை கொண்டு வரும்படி எங்களுக்காக ஜெபியுங்கள்.
எங்களில் சிலர் பெற்றோரை விட்டுப் பிரிந்து விடுதியில் தங்கியிருப்பதால் எங்கள் மன ஆரோக்கியத்திற்காக ஜெபியுங்கள்.
எங்கள் எதிர்காலம் நன்றாக அமைய ஜெபியுங்கள்.

# கூடாதது ஒன்றுமில்லையே!

திரு. P. செழியன், மிஷனரி, ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

நமது வாழ்க்கையில் அநேக நேரங்களில் மலை போன்ற பிரச்சனைகளை நாம் எதிர்கொள்ளுகிறோம். இந்தச் சூழ்நிலையைக் கடந்துபோக முடியுமா? என்று நாம் வியப்படைகிறோம். பிரச்சனைகள் எல்லா இடங்களிலும் இருக்கிறது. அவைகள் குடும்பங்களில், வேலையில், வியாபாரத்தில் அல்லது நமது தனிப்பட்ட வாழ்க்கையில்கூட மறைந்துள்ளது. ஆனால் நமது தேவன் சாத்தியமற்றவைகளின் தேவன் என்பதை நாம் மறந்து போய்விடக்கூடாது. ஒன்றும் அவருக்குக் கடினமானது அல்ல. அனைத்துக் காரியங்களையும் அவரால் செய்ய முடியும். தேவன் தீர்க்க முடியாத அளவிற்கு எந்தப் பிரச்சனையும் பெரியது அல்ல. தேவன் விடுவிக்கக் கூடாதபடிக்கு எந்தச் சூழ்நிலையும் கடினமானது அல்ல. மிகவும் மோசமான சூழ்நிலையிலும்கூட தேவன் ஒரு அதிசயத்தைச் செய்ய முடியும். நற்செய்தி என்பது ஒரு நம்பிக்கையின் செய்தியாகும். நாம் அவரிடத்தில் வந்து, அவரை நம்பும்போது தேவன் அதிசயங்களைச் செய்ய முடியும். சாத்தியமற்ற சந்தர்ப்பங்களில் தேவன் எவ்வாறு செயல்படுகிறார் என்பதைத் திருமறையின் எடுத்துக்காட்டுகள் சிலவற்றிலிருந்து நாம் தியானிக்கலாம்.

### சூன்யத்திலிருந்து முழுமை

பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது (ஆதி 1:2). வெளிப்படையாகக் கூறினால் அங்கே தொடங்குவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால், தேவ ஆவியானவர் தண்ணீரின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். தேவன் பேச ஆரம்பித்தபோது, ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்ற ஆரம்பித்தது. அவருடைய வார்த்தையின் வல்லமையால் வெளிச்சம், ஆகாய விரிவு, பூமி, பிரபஞ்சம், தாவரங்கள், விலங்குகள் ஆகிய யாவும் உருவாக்கப்பட்டது. படைத்தவரின் அதே சாயலில் மனிதன் படைக்கப்பட்டு அவருடைய படைப்புகள் அனைத்திற்கும் மகுடமாக விளங்கினான். நமது தேவன் சர்வ வல்லமையுள்ளவர். அவர் ஒன்றைத் தொடங்குவதற்கு ஒரு மூலபொருள்கூட அவருக்குத் தேவையில்லை. முற்றிலும் வெறுமையான சூழ்நிலையிலிருந்து தொடங்கவும், அதைப் பரிபூரணமாக்கவும் அவரால் கூடும். நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் கிறிஸ்து வந்தார் (யோவா 10:10).

### சிறையிலிருந்து அரண்மனை

யோசேப்பு அவனுடைய தகப்பனுக்கு கண்ணின் மணியைப் போன்றவன். ஆனால், அவன் ஒரு அடிமையாக விற்கப்பட்டான். அவன் குற்றமற்றவனாக இருந்தாலும் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டான். பான பாத்திரக்காரனால் அவன் மறக்கப்பட்டுப் போனான். எனினும் அவன் எங்கெல்லாம் சென்றானோ அங்கெல்லாம் கர்த்தர் அவனோடிருந்து அவன் விருத்தியடையும்படிச் செய்தார். அவர் நியமித்த வேளையில், யோசேப்பு தேசத்தின் பிரதம மந்திரியானான் (ஆதி 41:38). இதுபோல தானியேலும் அவனது நண்பர்களும் பாபிலோனில் வெறும் அடிமைகளாக இருந்தனர். ஆனால், தேவனுடைய ஆவியினால், அவர்கள் முக்கிய அரசாங்க அதிகாரிகளாக மாறினார்கள் (தானி 4:8). நாமும்கூட பாவத்தின் கேடுகெட்ட அடிமைகளாக இருந்தோம். ஆனால், நம்மிடம் செயல்பட்ட ஆவியானவரின் கிரியையினால் நாம் புதிதாக்கப்பட்டிருக்கிறோம்.

### முற்கோபத்திலிருந்து பொறுமை

மோசே ஒரு முன்கோபக்காரர். எபிரேயனைக் கொடுமைப்படுத்திய எகிப்தியனை அவர் கொலை செய்தார். ரெகுவேலின் குமாரத்திகள் சார்பாக அவர் மேய்ப்பர்களுக்கு எதிராக நின்றார். ஆனால் தேவன், மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவன் என்று சாட்சி கூறும்படியாக தேவ ஆவியானவர் அவரை உருவாக்கினார் (எண் 12:3). மோசேயின் தோள்கள் சுமக்கக்கூடாதபடி அவரது பாரம் அதிகமானபோது கர்த்தர் அவர் மேலிருந்த ஆவியை எடுத்து 70 மூப்பர்களின்மேல் வைத்தார் (எண் 11:16,17 & 24,25).

சமாரியர்கள் நற்செய்தியை ஏற்றுக்கொள்ள மறுத்தபோது, யோவான் அவர்கள்மீது வானத்திலிருந்து அக்கினியைப் பொழியப்பண்ணுகிற அளவுக்கு சீற்றம் கொண்டவராக இருந்தார். ஆனால் பெந்தெகோஸ்தே அனுபவத்திற்குப் பிறகு அவருடைய நிருபங்களில் அவர் அன்பைப் பற்றி எழுதியுள்ளதை நாம் காண முடியும்.

மாற்கு நிமித்தமாக பர்னபாவிடம் பவுல் மிகவும் கடுமையாகச் சண்டையிட்டார். ஆனால் பிற்பாடு பயந்த சுபாவமுள்ள தீமோத்தேயுவையும், திருடனான ஒநேசிமுவையும் அவரால் மகன்களாக ஏற்றுக்கொள்ள முடிந்தது. “மாற்கு எனக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவன்” என்று அவரால் சொல்ல முடிந்தது.

கதவுகளுக்குப் பின்னாகப் பயந்து ஒளிந்துகொண்டிருந்த அப்போஸ்தலர்கள் பெந்தெகோஸ்தே அனுபவத்திற்குப் பின்னர் தைரியமாகப் புறப்பட்டுச் சென்று நற்செய்தியைப் பிரசங்கித்தார்கள். எதிர்ப்பு ஏற்பட்டபோது அவர்கள் தைரியத்திற்காக ஜெபம் பண்ணித் துன்புறுத்தல்களைத் துணிவுடன் எதிர்கொண்டார்கள்.




பரிசுத்த ஆவியானவர் குணாதிசயத்திலே எவ்வளவு பெரிய மாற்றத்தைக் கொண்டு வருகிறார்! ஆம், அன்பானவர்களே, நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால் நாம் புது சிருஷ்டிகள். "இது என்னுடைய சுபாவம்", "நான் இப்படிப்பட்ட நபர்தான்", "இது என்னுடைய பலவீனம்", என்று நாம் சொல்லிவிட முடியாது. நாம் கடவுளிடம் சரணாகதி அடையும்போது அவர் நம்மில் கிரியை செய்து நம்மிடமுள்ள சிறந்தவற்றை வெளியே கொண்டு வருகிறார். புதியன வந்து விட்டன. அல்லேலூயா!

**சாதாரணத்திலிருந்து அசாதாரணம்**

பெசலெயேலும், அகோலியாபும் சாதாரண மனிதர்கள். ஆனால் அவர்கள் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டபோது, ஒரு செதுக்குநர் அல்லது ஒரு வடிவமைப்பாளர் அல்லது ஒரு நெசவு வேலை செய்பவர் மற்றும் ஒரு திறமையான பணியாளர் அல்லது நுட்பமான வடிவமைப்பாளர் போன்று அனைத்து வேலைகளையும் செய்வதற்கு அவர்கள் திறமை பெற்றவர்களாக மாறினார்கள். மேலும் அவர்கள் அனைத்து தச்சு வேலைகள், ஆபரண வேலைகள், நெசவு வேலைகள் போன்ற அனைத்து வேலைகளையும் செய்வதற்கு எவ்வாறு அத்தகைய அசாதாரணமான திறமையைப் பெற்றிருந்தார்கள் என்பது புரிந்துகொள்ள இயலாத காரியம். ஆம்! மனிதர்களால் கூடாத காரியங்கள் தேவனால் கூடும்.

**வெறுமையிலிருந்து நிறைவு**

ஆபிரகாமும், சாராளும் குழந்தையற்றவர்களாக இருந்தனர். ஆனால், தேவன் அவர்களுக்கு ஈசாக்கைக் கொடுத்து அதன்மூலமாக இஸ்ரவேல் என்ற தேசத்தை உருவாக்கினார். அன்னாளுக்குப் பிள்ளையில்லாதிருந்தது. ஆனால், தேவன் அவளுக்கு சாமுவேலைக் கொடுத்தார். அவர் இஸ்ரவேலில் பெரிய தீர்க்கதரிசியாக மாறினார். சகரியாவும், எலிசபெத்தும் பிள்ளைபெற இயலாத நிலையிலிருந்தனர். ஆனால், தேவன் அவர்களுக்கு யோவான் ஸ்நானகனைக் கொடுத்தார். அவர் மேசியாவுக்கு முன்னோடியானவர். நமது கர்த்தர் சாதகமற்றவைகளைச் சாதகமாக்குவதில் நிபுணத்துவம் பெற்றவர். அவரால் வனாந்திரத்தில் நீரோடைகளைக் கொண்டுவர முடியும். சூரிய வெப்பத்தால் சுட்டெரிக்கப்படும் நிலத்தில் நம்முடைய தேவைகளைத் திருப்தி செய்யவும் நன்றாக நீர் பாய்ச்சப்பட்ட தோட்டத்தைப்போல நம்மை மாற்றவும் அவரால் கூடும். என்ன ஒரு ஆச்சரியம்! சூரிய வெப்பத்தால் சுட்டெரிக்கப்படும் நிலையில் இருந்தாலும் நன்றாக நீர்ப்பாய்ச்சப்பட்ட நிலத்தைப் போல நாம் மாற முடியும்.

**துக்கத்திலிருந்து சந்தோஷம்**

எல்லாம் நன்றாக நடைபெறும்போது நாம் மகிழ்ச்சியாக இருப்பதும், சமாதானமாக இருப்பதும் சுலபமான காரியம். ஆனால், கடுமையான சூழ்நிலைகளை நாம் சந்திக்கும்போது நம்முடைய சமாதானத்தை காத்துக் கொள்ளுவது சாத்தியம்தானா? ஒரே நாளில் ஆரோன் தனது மகன்களாகிய நாதாபையும், அபியுவையும் இழந்து போனார். எனினும் தன்னுடைய துக்கத்தை மறைத்து அமைதியாக இருக்க அவரால் முடிந்தது. சிலுவையைச் சந்திக்கும் முன் தன்னுடைய சீஷர்களை ஆறுதல்படுத்த இயேசுவால் முடிந்தது. இரத்தச் சாட்சியாக மரித்த ஸ்தேவானால், அவரைத் துன்பப்படுத்தியவர்களை மன்னிக்க முடிந்தது. தான் சிறைச்சாலையில் இருந்தாலும் பிலிப்பியர்களிடம் சந்தோஷமாய் இருக்கும்படித் திரும்பத் திரும்ப ஆலோசனை வழங்க பவுலால் முடிந்தது. பெலப்படுத்துகிற தேவ கிருபையால் இவைகள் எல்லாம் சாத்தியமாயின. அவர் சகல ஆறுதல்களின் பிதா.

நமது வாழ்வில் எவைகளையெல்லாம் ஆண்டவர் செய்ய முடியும் என்பதற்கு இவையெல்லாம் சில துளிகள் மட்டுமே. நிச்சயமாகவே, "தேவன் தம்மில் அன்புகூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகள் கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1 கொரி 2:9). சங்கீதக்காரனின் வார்த்தைகளினால் நம்மை திடப்படுத்திக்கொள்வோம். "என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன்" (சங் 42:5). அனைத்துக் காரியங்களும் தேவனுடன் சாத்தியமானவைகள்தான்.

# வேதாகம ஆராய்ச்சி - 4

## திருவிருந்து

**C. சுதாகர், முதலூர்**

திருச்சபையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆசரிக்கச் சொன்ன இரண்டு சாக்கிரமந்துகளில், ஒன்று ஞானஸ்நானம் மற்றொன்று திருவிருந்து (நற்கருணை). திருவிருந்து தேவனால் முன்குறிக்கப்பட்டு கிறிஸ்துவால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவரே நமக்கு மாதிரியை வைத்துப் போனார் என்று மத் 26:28; மாற் 14:24; லூக் 22:20லும் வாசிக்கிறோம். திருவிருந்து ஏதோ சபை ஒழுங்கு என்று மாத்திரம் நாம் நினைத்துவிடக் கூடாது. அது ஓர் கட்டளை ஆகும். ஞானஸ்நானம் இரட்சிக்கப்பட்டவுடன் ஒருமுறை தனியாக எடுக்க வேண்டியது. திருவிருந்தோ தொடர்ந்து சபையாக கடைபிடிக்க வேண்டியது.

### நாம் ஏன் கடைபிடிக்க வேண்டும்?

1. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே ஏற்படுத்தினார் - மத் 26:26-39.

2. ஆதி திருச்சபையினால் கடைபிடிக்கப்பட்டது - அப் 2:42,46; 20:7

3. நிருபங்களில் சபைக்கு போதனையாக்கப்பட்டது - 1 கொரி 11:17-34.

4. இது கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிதல் - 1 கொரி 11:24.

5. இது கர்த்தரை நினைவுகூறும் செயல் - 1 கொரி 11:24.

6. கர்த்தரின் வருகைக்கு காத்திருப்பதை அறிவிக்கும் செயல் - 1 கொரி 11:26.

7. இது கர்த்தரின் வருகை வரை கடைபிடிக்க வேண்டிய செயல் - 1 கொரி 11:26.

### நாம் நினைவுகூற வேண்டியவை

1. அபாத்திரமாய் புசிக்கக்கூடாது. நம்மை நாமே சோதித்து அறிந்து பானம் பண்ண வேண்டும். ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகுதல், மன்னிப்பு போன்றவற்றை கடைபிடிக்க வேண்டும் - 1 கொரி 11:28-30.

2. ஆண்டவரின் பிராயச்சித்த பலிக்காக ஆண்டவரைத் துதிக்க வேண்டும்; நமது பாவங்களையும், நோய்களையும் அவர் சுமந்து தீர்த்தார், தேவனுக்கு சமீபமாய் நம்மை கொண்டு வந்தார் - ஏசா 53:4,5; 1 பேது 2:24; எபே 2:13; எபி 10:19,20.

### நாம் கவனிக்க வேண்டியவை

1. அப்பமும், பானபாத்திரமும், திராட்சரசமும் அடையாளச் சின்னங்கள் மட்டுமே. அப்பம் கிறிஸ்துவின் உடலாகவோ, திராட்சரசம் அவரது இரத்தமாகவோ மாறுவதில்லை - மத் 26:29.

2. கர்த்தருடைய பந்திக்கு தகுதியுடையவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே.

3. நேரம், நாள் ஆகியவற்றிற்கு புதிய ஏற்பாட்டில் முக்கியத்துவமில்லை. எனினும் தொடக்க கால விசுவாசிகள் வாரத்தின் முதல் நாளை இதற்காக பயன்படுத்தினர் (அப் 20:7; 1 கொரி 16:1). இராப்போஜனம் என்ற சொல்லாட்சி நிறுவப்பட்ட நேரத்தினை சுட்டுவதே அன்றி இரவில்தான் ஆசரிக்க வேண்டும் என்பதை கூறுவது அல்ல.

4. ஆயத்தமில்லாமல் இதில் பங்குபெறுவதை தவிர்க்க வேண்டும் - 1 கொரி 11:30.




### ஆந்திரப் பிரதேசம்

**துதிக்க & ஜெபிக்க**

▪ பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற கூடுகையில் 200 மாணவியர் கலந்து கொண்டனர்.

▪ பங்காளர் கூடுகையில் 24 பேர் கலந்துகொண்டு சவால் அடைந்தனர்.

▪ கர்நூலில் நடைபெற்ற பரீட்சை எழுதுவோருக்கான சிறப்புக் கூடுகையில் 43 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### அசாம்

**துதிக்க**

▪ வேதாகம விநாடி வினா போட்டியில் 52 செவிலிய மாணவியர் கலந்து கொண்டனர்.

▪ போன்டிடா அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

▪ பொம்மலாட்டம் மூலம் 45 சிறுவர் சிறுமியர் சந்திக்கப்பட்டனர்.

▪ சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 40 பேர் கலந்து கொண்டனர்.

▪ 85 விசுவாசிகள் இணைந்து அறுவடைப் பண்டிகையைக் கொண்டாடினர்.

▪ புதியதாக துவங்கப்பட்டுள்ள வேதபாட வகுப்பில் 12 பேர் கலந்து கொண்டனர்.

**ஜெபிக்க**

▪ தேடுவோர் - பாபா, பிரோன்ஸி, சொர்ணவதி, சீத்தாராம், ரோக்கோம்.

▪ தாசிராம் பக்கவாத நோயிலிருந்தும், பீம் கால் முறிவிலிருந்தும் குணமடைய.

### குஜராத்

**துதிக்க & ஜெபிக்க**

▪ மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாசக் கூடுகையில் 40 விசுவாசிகள் கலந்து கொண்டனர்.

▪ அம்பாலால் இருசக்கர வாகன விபத்தில் சிறுகாயங்களுடன் தப்ப தேவன் உதவினார்.

▪ இரண்டு நாட்கள் நடைபெற்ற தெபோராள் உபவாசக் கூடுகையில் 18 பெண்கள் கலந்து கொண்டு ஆசீர்வாத மடைந்தனர்.

▪ கர்ப்பப்பையிலிருக்கும் கட்டி நீங்கி பகவதி குணமடைய.

### கர்நாடகா

**துதிக்க**

▪ உபவாசக் கூடுகையில் 50 பேர் கலந்து கொண்டனர்.

▪ லக்ஷ்மியும், தேவதேதாவும் மன அழுத்த நோயி லிருந்து குணமடைந்ததுடன் நமது ஆராதனையில் கலந்துகொள்கின்றனர்.

▪ சிவாஜி மற்றும் ரேகா குடும்பத்தினரை விபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார்.

▪ வாலிபர் முகாம் மூலம் 35 பேர் ஆசீர்வாதமடைந்தனர்.

▪ நமது டியூசன் மையத்தின் மூலம் 25 மாணவ மாண வியர் பயனடைந்தனர்.

**ஜெபிக்க**

▪ யோகேஷ் குடும்பம் தங்களது கிராமத்தில் எதிர்ப்பை சந்தித்து வருகிறது.

▪ குணமடைய: ஜெயஸ்ரீ (தைராய்டு), நீலாவியா (எலும்பு முறிவு), சென்னம்மா (கண் பிரச்சனை), பங்கஜ் (சிறுநீரக கோளாறு), கௌரம்மா (காக்காய் வலிப்பு).

### கேரளா

**துதிக்க & ஜெபிக்க**

▪ 10 குடும்பங்கள் நற்செய்தி கேட்டனர்.

▪ பாலக்காடு பகுதியில் புதிதாக வேதபாட வகுப்பு துவங்கப்பட்டுள்ளது.

### மத்தியப் பிரதேசம்

**துதிக்க**

▪ நான்கு இடங்களில் ஞாயிறு பள்ளி துவங்கப்பட்டுள்ளது.

▪ வாலிபர் ஜெபக்குழுக்கள் மூலம் 80 வாலிபர்கள் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

▪ நடக்க இயலாமலிருந்த ஹனுமந்தை தேவன் குண மாக்கினார்.

▪ 14 வயது தயாராம் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

▪ திருமணமாகி 10 ஆண்டுகளுக்குப் பின் முக்கேஷ் & புஷ்பாவுக்கு குழந்தை பிறந்துள்ளது.

**ஜெபிக்க**

▪ சுகம் பெற – சந்தா, ராஜேஷ் & தால்சந்த் (காசநோய்), பரத் (குடல்வால் தொற்று), நர்பாத் (மார்பக புற்றுநோய்), சீத்தா (கல்லீரல் கோளாறு), அஜ்ஜனா (சிறுநீரக கல்), துல்சா (கர்ப்பப்பையில் இரத்தம் உறைதல்).

▪ மிஷனரி ஈஸ்வரி அப்ளாசாமியின் தாயாருக்கு வாயில் புற்றுநோய் உள்ளது.

▪ வைஷ்ணவியும் பிரபாவும் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுபட.

### மகாராஷ்டிரா

**துதிக்க**

▪ 60 பேர் கலந்துகொண்ட பங்காளர் கூடுகை ஆசீர்வா தமாய் இருந்தது.

▪ கோடோலியிலிருந்து 15 பேர் கொண்ட குழு வடுஜ் பணித் தளங்களை பார்வையிட்டு சவாலுடன் திரும்பினர்.

▪ 2 நாட்கள் நடைபெற்ற வாலிபர் கூடுகையில் 65 பேர் கலந்து கொண்டனர்.

▪ புதிய விசுவாசிகளுக்கான புது வாழ்வு கூடுகையில் 35 பேர் கலந்து கொண்டனர்.

**ஜெபிக்க**

▪ குணமடைய – விலாஷ் (பக்கவாதம்), ரமேஷ் (புற்று நோய்), ஷோபா, கிரண், சாக்ஷி (மனநோய்), வனுசூ (சிறுநீரக கல்), கோதாரி (குடல்வால் தொற்று), ராகேஷ் (பேச, கேட்க முடியாமை).

▪ 3 இடங்களில் வேதபாட வகுப்புகள் மற்றும் இலக்கியப் புத்தகம் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### ஒடிசா

**துதிக்க**

▪ ஒரு நாள் கூடுகையில் 60 பேர் கலந்து கொண்டனர்.

▪ முழுஇரவு ஜெபத்தில் 30 பேர் கலந்து கொண்டனர்.

▪ ஆசீர்வாத சிறுவர் விடுதி மாணவி ரஷ்மிதா இறகு பந்து விளையாட்டுப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார்.

▪ ஜெகபந்துவை விபத்திலிருந்தும் மோகனை பாம்பு கடிக்காதபடியும் தேவன் பாதுகாத்தார்.

▪ 3 நாள் உபவாசக் கூடுகையில் 62 பேர் கலந்து கொண்டு ஆசீர்வாதமடைந்தனர்.

▪ ஆசீர்வாத பத்திரிக்கை வாசகர் கூடுகை கோராபுட்டில் நடைபெற்றது. 125 பேர் கலந்து கொண்டனர்.

**ஜெபிக்க**

▪ குணமடைய – ஜோகேந்திரா (கை எலும்பு முறிவு), தேய் & சாஹேப் (கண் பிரச்சனை), ராமச்சந்திரா (நடக்க முடியாமை), தபுலா (சர்க்கரை நோய்), சிமா (கடும் வயிற்று வலி), ரெய்தா (2 மாதமாக இருமல்), சங்கர் & ஜான் (பேச இயலாமை), 5 வயது ஜான் (இரத்த அணு குறைவு), தசோ (நுரையீரல் கோளாறு), ஆகாஷ் (போலியோ), கேசு (ஆஸ்துமா), சந்திரிகா (சிறுநீரக கோளாறு), லிட்டு (சிக்கிள் செல்), மல்லி (சிறுநீரக கல்), மொந்தாய் (குஷ்டரோகம்), சந்திரா (மனநோயாளி).

▪ ரத்தியும் அவரது தாயாரும் சத்தியத்தில் நிலைத்து நிற்க.

▪ பன்னோ சுவிஷேசத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்.

▪ கிராமத்தில் குடிதண்ணீர் எடுக்க ரமேஷ் குடும்பத்தினர் தடை செய்யப்பட்டுள்ளனர்.

### பஞ்சாப்

**துதிக்க & ஜெபிக்க**

▪ பஞ்சாபி மொழியில் முதல் ஆசீர்வாத புத்தகமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ள "மண்ணிலே வெண்ணிலா" தேவ நாமம் மகிமைக்கென அர்ப்பணிக்கப்பட்டது.

▪ ஆசீர்வாதக் கூடுகையில் 86 பேர் கலந்து கொண்டனர்.

▪ தேர்வு எழுதச் செல்வோருக்கான கூடுகை 56 பேருக்கு ஆசீர்வாதமாயிருந்தது.

▪ ராஜ்பீந்தர், நிஷா, கௌசல்யா இரட்சிக்கப்பட.

### இராஜஸ்தான்

**துதிக்க**

▪ 10 குடும்பத்தினர் நற்செய்தி கேட்டனர்.

▪ சுகம் பெற்றவர்கள்: பனாராசி (கட்டி), ஜிம்மிலி & ராமு (சிறுநீரக கோளாறு), லீலா (இருதயக் கோளாறு), ஜம்னா (முதுகு, கால் வலி).

▪ சந்தோஷ் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலை யானார்.

**ஜெபிக்க**

▪ குணமடைய – தீயா (காலில் கட்டி), தாப்பு (வயிற்றில் கட்டி), மீரா (சிறுநீரக கல்), சார்தா (10 வருடங்களாக மனநோய்), கேசு (வலிப்பு நோய்).

**தமிழ்நாடு**

**துதிக்க**

▪ வாகன விபத்திலிருந்து சரவணனை தேவன் பாதுகாத்தார்.

▪ நெய்மலையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 23 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

▪ உபவாசக் கூடுகையில் 28 பேர் கலந்து கொண்டனர்.

▪ குடும்ப கூடுகையில் 18 குடும்பங்கள் கலந்து கொண்டனர்.

**ஜெபிக்க**

▪ மிஷனரி ஜோசப்புக்கு காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு குணமாக.

▪ சுகம்பெற: தனபால் (மனநோயாளி), வெங்கடாசலம் (அதிக சர்க்கரை, ஆபத்தான நிலையிலுள்ளார்).

▪ ஊழியத்தை எதிர்க்கும் அரவிந்த் கிறிஸ்துவை அறிந்துகொள்ள.

▪ காமராஜ், அனுசுயா, ராகுல், நாகராஜ், யேசுராஜா, டேவிட், வெங்கடேஷ் ஆகியோர் தொடர்ந்து ஆராதனைக்கு வர.

**தெலுங்கானா**

▪ தேர்வு எழுத செல்வோருக்கான கூடுகை 30 பேருக்கு ஆசீர்வாதமாயிருந்தது.

▪ திரு & திருமதி ரத்னாகரின் போதிக்கும் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். 210 பேர் பக்தி விருத்தியடைந்தனர்.

▪ 7 வயது ஏஞ்சலை டெங்கு காய்ச்சலிலிருந்து தேவன் சுகப்படுத்தினார்.

**உத்தரப் பிரதேஷம்**

**துதிக்க & ஜெபிக்க**

▪ பகவதியும், வினோத்தும் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

▪ குணமடைய – தயாசந்த் (டைஃபாய்டு & மலேரியா), முன்னா (நெஞ்சுவலி), குசம் (கண் பிரச்சனை), சுக்கி (இருதய நோய்), ரச்னா (கழுத்தில் கொப்புளங்கள்).

▪ ஏற்ற வாழ்க்கைத்துணை – அஜத், ராகுல், பிரகாஷ் ஹரிதாஸ், அனில் மற்றும் சுபாஷ்.

**BYM ஆதரவாளர்களின் கவனத்திற்கு வங்கி கணக்கு எண் மற்றும் பெயர் மாற்றங்களை கவனிக்க**

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திற்காக கொடுக்க விரும்பும் அல்லது சேகரிக்கும் காணிக்கைகளை அனுப்ப (மிஷனரி பணி, மிஷனரி குழந்தைகள் தாங்குதல், ஆசீர்வாதம் பத்திரிகையின் சந்தா,etc.,) கீழ்கண்ட வங்கி கணக்குகளில் ஒன்றை தெரிந்தெடுக்கவும்.

***Home & NRE donors***

A/c Name: Blessing Youth Mission
A/c No. 37268642054
Bank Name: State Bank of India
Account Type: Current Account
Branch Name: Siruthozhil, Vellore
Vellore - 632 006
Branch Code: 7274
IFSC No: SBIN0007274

***Gulf Donors***

A/c Name: T.Dickson Daniel Moses
A/c No: 35374362080
Bank Name: State Bank of India
Account Type: Savings Bank Account
Branch Name: Siruthozhil, Vellore
Vellore - 632 006
Branch Code: 7274
IFSC No: SBIN0007274

***Online payment***

எங்கள் இணையதளம் www.bymonline.orgல் SBI icollect மூலமாகவும் காணிக்கையை அனுப்பலாம்.

Online Payment மூலமாக காணிக்கைகளை அனுப்பியவுடன் உங்கள் பெயர், முகவரி, கைப்பேசி எண் மற்றும் அனுப்பப்பட்ட காணிக்கை எந்தவகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்ற விபரங்களை 9445274310 என்ற எண்ணிற்கு SMS மூலமாக அல்லது 9445275410 / +91 416 2242943 / 2248943 என்ற எண்களில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அல்லது hq@bymonline.org copy to bymfinance@gmail.com என்ற மின் அஞ்சல் வழியாக உடனுக்குடன் எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM)

நடத்தும்

BLESSO

# ஆசீர்வாத முகாம்

கருப்பொருள்

**மீந்திருப்போர்**

## மே

## 21-24

வியாழன் மாலை 6 மணி முதல்
ஞாயிறு மதியம் 12 மணி வரை

பிஷப் ஹீபர் கல்லூரி வளாகம்,
புத்தூர், திருச்சி

செய்தியாளர்கள்

**சகோ.A. லயணல்**

Dr. R. **ஜெயக்குமார்**

**மிஷனரி. ஜேசன் பிரின்ஸ்**

மற்றும் சிலர்

ஆண், பெண் இருபாலர்க்கும்
பங்குபெற ஜெபித்து ஆயத்தப்படுங்கள்

தொடர்புக்கு

*M.R.பால்ராஜ்-9443614765*

*D.M.ஹேஸ்டிங்ஸ்-9443303886*

*V.அந்தோனிராஜ்-9789257269*



## ஜெபக்குறிப்புகள்

ஆயத்தப் பணிகள்
அனைத்திலும் ஆவியானவரின்
நடத்துதலுக்காக

தமிழகத்தின் அனைத்து
பகுதிகளிலிருந்தும் விசுவாசிகள் பங்குபெற

போக்குவரத்து வசதிகளுக்காக,
ஏற்ற அரசியல் மற்றும்
கால சூழ்நிலைகளுக்காக

கருப்பொருள் செய்திகள் மூலம்
ஆவிக்குரிய வாழ்வில் விழிப்படைய

ஆராதனை வேளையில்
ஆண்டவரின் தொடுதலுக்காக

மிஷனரி நிகழ்ச்சிகள் வாயிலாக
அனைவரும் மிஷனரி தரிசனம் பெற்றிட

சுற்றுப்புற சுவிசேஷம் மற்றும் தனித்தாள்
ஆத்தும ஆதாயப் பணிகளில்
தீவிரமாக ஈடுபட தங்களை அர்ப்பணித்திட

இலக்கிய ஊழியம்
ஆசீர்வாதமாய் அமைய

முகாமில் அனைத்து வசதிகளும்
சிறப்பாய் அமைந்திட

தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட,
பின்தொடர் ஊழியங்களுக்காக

Registered with the Registrar of Newspapers
for India Under No.30301/73
Published on the 4th week of every previous month
Posted on 30th and 1st of next month

Postal Registration No. TN/ARD/81/2018-20
Licensed to post without prepayment
TN/PMG(CCR)WPP690/2018-2020



# மிஷனரிப் பிள்ளைகளுக்குக் கல்வியுதவி

நல்ல கல்வியென்றால் இந்நாட்களில் செலவு அதிகம். மாதந்தோறும் மிஷனரிகளுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகையில் அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைப்பது கூடாத காரியம். பெற்றோர் தங்கி ஊழியம் செய்யுமிடங்களில் சரியான கல்வி வசதி இல்லாதபடியால் பெரும்பாலான பிள்ளைகள் பள்ளி அல்லது கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்க நேரிடுகிறது. பிள்ளைகளுடைய கல்வித் தேவைகளை நாம் சரிவரக் கவனிக்காவிடில், பெற்றோர் மன நிம்மதியோடு தங்கள் ஊழியத்தைச் செய்ய முடியாது. இத்தேவையில் மிஷனரிக் குழந்தைகளுக்கு உதவ கல்வியாண்டின் துவக்கத்தில் சிறப்பான உதவித் தொகை (ALLOWANCE) வழங்குகிறோம். மாதந்தோறும் கல்வி நிதியுதவியும் அளிக்கிறோம்.

மேற்படிப்புக்காக முன்னுதவி (ADVANCE) வழங்கவும் ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேலைக்கு வந்ததும் வட்டியில்லாமல் இலகுவான தவணையில் பிள்ளைகள் இதைத் திரும்பச் செலுத்த வேண்டும். இப்பெருந் தேவைக்காக வாசகர்கள் இம்மாதம் சிறப்பான காணிக்கை அனுப்பக் கேட்கிறோம். புதிய கல்வியாண்டு துவக்கத்திலேயே இப்பணம் தேவை. உங்கள் பிள்ளைகளைப் போலவே மிஷனரிப் பிள்ளைகள் மீதும் நீங்கள் கரிசனை கொள்ளும் போது கடவுள் மகிழ்ச்சியடைவார். உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் தகுந்த பலனை அருளுவார்.

நமது மிஷனரிப் பிள்ளைகளுக்கு தரமான கல்வி அளிக்கும்படியாக வருடா வருடம் எங்களுக்கு உதவி செய்துவரும் உங்களுக்கு நன்றிகள் பல. ஒவ்வொரு ஆண்டும் சில பிள்ளைகள் பட்டம் பெற்று வேலையில் சேர்கின்றனர். சிலர் கடனை திரும்பச் செலுத்தத் துவங்கியுள்ளனர். இந்தப் பிள்ளைகள் மிஷனரிப் பிள்ளைகளின் கல்விப் பொறுப்பை ஏற்கும் நன்னாளுக்காய் ஏங்கி நிற்கிறோம். வேலையில் இருக்கும் BYM மிஷனரிப் பிள்ளைகள், நீங்கள் அவர்களுக்குச் செய்த யாவற்றிற்காகவும் நன்றியுள்ள இருதயத்தோடு உங்களை வாழ்த்துகின்றனர்.

**Blessing Youth Mission, 8,Church Colony, Vellore 632 006 (T.N.)**
**Call us: 094452 75410 / 91 416 2242943 or email us: hq@bymonline.org**

1971 முதல் எழுப்புதலுக்காகவும் மிஷனரிப் பணிக்காகவும் சபைப்பிரிவு பாகுபாடற்ற நிலையில் இயங்கிவரும் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BLESSING YOUTH MISSION) செய்திகளையும், செயல்களையும் இப்பத்திரிகை அறிவிக்கிறது.

ஒரு பிரதி : ரூ.10/-
ஆண்டுச் சந்தா : ரூ. 100/-
ஆயுள் சந்தாதாரர்கள் (ரூ.1000/-) இப்பத்திரிகை மட்டுமல்ல, அவர்கள் சந்தாதாரராகும் நாள் முதல் 15 வருடங்களுக்கு BYM வெளியிடும் புத்தகங்களையும் இலவசமாய்ப் பெறுவார்கள்.
பிற மொழிப் பதிப்புகள் :
அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்.

**BLESSING YOUTH MISSION**
**CHURCH COLONY, GANDHI NAGAR P.O., VELLORE 632 006, INDIA**
**Tel: 00 91 416 2242943, 2248943 <hq@bymonline.org>**

Printed by Paul Aravamuthan at M/s Bapuji Printers, 5 Kurban Ali Street, Woods Road, Mount Road, Chennai 600 002 and Published by V. Ashok Immanuel on behalf of Blessing Ministries, No.21 West Coovam River Road, Chintadripet, Chennai 600 002. Editor : J.D. Sapphire